A/L 88
பிரிவு III
விரைவில் ஆரம்பம்.
விபரங்களுக்கு:—
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

A/L 88
பிரிவு II
Physics
Chemistry
Zoology
Botany
Pure & Applied Maths
விபரங்களுக்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

மலர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு வைகாசி மீ 24 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரமழான் பிறை 28 (07 06 1986) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 20

## கருத்துக் கலசம்

### வெடி, குண்டு, புரளி

வெடி என்ருல் அச்சம் என்பது தூய தமிழ் அர்த்தம். இடி, முழக்கம், கேடு என்ற பொருள்களும் உண்டு. வெடி என்ருல் இளம் வயதில் நாம் கொளுத்திய சீனவெடி தான் உடன் ஞாபகத்துக்கு வரும்.

சீன வெடிகள் பல விதம். சிறுவர்களுக்கு மட்டுமன்றி பெரியவர்களுக்கும் திகிலூட்டும் விதத்தில் சீன வெடிகள் இருக்கும். அவற்றைப் பட்டாசு, வாணம் என்றும்சொல்வோம் புளுகு சொல்வோரை 'சும்மா வெடிக்காதீர்' என்று பேச்சு வழக்கில் கூறுவர். வாண வேடிக்கை கோயில்களில், கல்யாண வீடுகளில் பொழுது போக்காக இருந்ததும் ஒருகாலம்.

ஆனல் இப்போது துப்பாக்கி வெடி, குண்டு வெடி, ஷெல் வெடி, கிறனேட் என்று வெடிகள் புதிய உருவங்களில் வந்து விட்டன. அந்த வெடிகள் உயிர் குடிக்கும் பயங்கர வெடிகள். தமிழ்ப் பகுதிகளில் அவை இப்போது தாராளமாகப் பாவனையில் உள்ளன.

ஆனல் அந்த வெடிகளுக்கும் சத்தத்துக்கும் தமிழ் மக்கள் பழக்கப்பட்டு விட்டனர் வெடிச்சத்தம் கேட்டு வெடி (அச்சம்) கொள்வோர் இப்போது மிகக் குறைவு. அவ்வளவு சாதாரணமாகி விட்டது வெடி தரும் வெடி. எத்தனையோ தமிழர்களின் உயிர்களை ஷெல் வெடிகள், துப்பாக்கி வெடிகள் பதம் பார்த்து விட்டன.

வீட்டில் இருந்தாலும் சரி, வீதியால் சென்ருலும் சரி, பாடசாலையில், ஆஸ்பத்திரியில் இருந்தாலும் சரி, விளையாட்டு மைதானத்தில் இருப்பினும் சரி வெடி வந்து தாக்கும் என்பதால் அதற்கு அஞ்சும் பழக்கம் தமிழர்களுக்கு இப்போது குறைந்து வருகிறது, அதாவது அவர்கள் வெடிக்கு "Immuned" ஆகி விட்டார்கள்!

ஆனல் இப்போது தென்னிலங்கையில் தான் வெடி கண்டும், கேட்டும் கிலி அடைகிருர்கள் அப்பகுதி மக்கள். அடிக்கடி அங்கு இப்போது வெடி குண்டுகள் அச்சுறுத்துகின்றன. கட்டுநாயக்காவில், கோட்டை மத்திய தந்திக் கந்தோரில், 'எலிபன்ட் ஹவு'ஸில் என்று வெடிகுண்டுகள் ஒரே கலக்குக் கலக்கி விட்டன.

அதனல் சர்வ வல்லமையும் கொண்ட ஜனதிபதியின் ஆட்சியிலும், பாதுகாப்பிலும் உள்ள சிங்கள மக்கள் கூட வெடி குண்டு என்றதும் கிலி அடைகிருர்கள், அதனல் வெடி குண்டுப் புரளிகள் தலை நகரில்

(8ம் பக்கம் பார்க்க)

## நேற்று மூன்றும் நாட் போர்

# கிளிநொச்சியில் அகதிகள் பெரும் எண்ணிக்கையில்

## இறந்தோரின் சடலங்கள் அகற்றப்படாது கிடந்து நாற்றம்

## குண்டுகள் விழுந்து விவசாயம் பாழ்

-அலுவலகச் செய்தியாளர்-: கே. ஆர்

யாழ்ப்பாணம், ஜூன் 7

கிளிநொச்சியில் நேற்று மூன்ருவது நாளாக போராளிகள் - படையினர் மோதல் தொடர்ந்து நடைபெற்றது.

விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல் என்டனவற்றைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் பல கிராமங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் அகதிகளாகி உள்ளனர். அவர்கள் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இதேவேளை கடந்த மூன்று நாட்களிலும் கொலையுண்டவர்களில் அனேகரின் சடலங்களை அகற்ற முடியாதநிலை ஏற்பட்டு, அவை கிடந்து நாற்றம் எடுப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன

பொம்மர் விமானங்கள் வீசிய குண்டுகளால் பல இடங்களில் விவசாயம் நாசமாயிற்று

கிளிநொச்சியில் நேற்று மூன்ருவது நாளாக போராளிகள் - படையினர் மோதல்கள் இடம் பெற்றன.

நேற்றுக் காலை ஏழு மணியளவில் கிளிநொச்சி, வட்டக்கச்சி, இரணைமடு, ஜெயந்தி நகர், உருத்திரபுரம், கனகபுரம் ஆகிய பகுதிகளில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசின.

காலை ஏழு மணிக்குத் தொடங்கிய குண்டு வீச்சுகள் நண்பகல்வரை தொடர்ந்ததாகத் தெரியவருகிறது.

குண்டுவீச்சின் விளைவாகப் பலவீடுகள் எரிந்து சேதமடைந்தன. வயல்கள், தோட்டங்களும் எரிந்து நாசமாகின.

### தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்டத்தில் உணவு, எரிபொருள்கள் ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்துச்

(8ம் பக்கம் பார்க்க)



சுமார் 30 வருடங்களாக பாவனையில் இல்லாமல் இருந்த அராலித் துறை இப்போது மீண்டும் சுறுசுறுப்படைந்திருக்கிறது.

தீவுப் பகுதிக்கு பண்ணைப் பாலம் வழியான போக்குவரத்து தடைப்பட்டதே அராலித்துறைக்கு மீண்டும் மவுசு ஏற்படக் காரணம்

படகு ஒன்றின் மூலம் அராலித் துறையை விட்டு மக்கள் புறப்படும் காட்சியை இந்தப் படத்தில் காணலாம். (உ)

### சுபநேரம்

7 — 6 — 1986
சனிக்கிழமை

சுபநேரம்:
2 52 முதல் 4 22 வரை
ராகுகாலம்:
8 52 முதல் 10 22 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அமாவாசை விரதம்

| நோன்பு நேரம் | |
|---|---|
| சஹர் | 4 18 |
| இப்தார் | 6 24 |

### ரயிலில் குண்டு

கொழும்பு, ஜூன் 7

கொழும்பு மாளிகாவத்தை ரயில்வே யார்ட்டில் நிற்பாட்டப் பட்டிருந்த ரயில்பெட்டி ஒன்றில் நேற்று குண்டு வெடித்தது.

இதனல் அப்பெட்டி பெரும் சேதமடைந்தது. (உ)

## கப்பல் மர்மம் நேற்று துலங்கியது

கொழும்பு, ஜூன் 7

காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து சிமெந்துடன் கொழும்பு புறப்பட்ட தாய்வான் கப்பல் மூன்று நாள் 'மர்ம'த்தின் பின்னர் நேற்று கொழும்புத்துறைமுகம் சென்றது.

கப்பல் துறைமுகத்தில் இருந்து 5 மைல்களுக்கப்பால் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

கப்பலினுள் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் வெடிகுண்டு தொடர்பாக நிபுணர்கள் கப்பலை பரிசோதனை இட்டு சந்தேகத்தை நீக்கிய பின்னரே துறைமுகத்துக்குள் கப்பல் அனுமதிக்கப்படும் என்று தெரிகிறது. (உ-எ)

## யாழ். செயலகம் நேற்று இயங்கவில்லை

### பலியான சாரதிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ் அரச செயலகம் நேற்று முற்ருக இயங்கவில்லை, செயலகத்தில் சகல அலுவலகப் பிரிவுகளும், வீடமைப்பு திணைக்களமும் மூடப்பட்டே இருந்தன,

புதன்கிழமை கிளிநொச்சியில் குண்டுவீச்சுக்கு இலக்காகி உயிரிழந்த அரச அதிபரின் சாரதிக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாகவும் — இந்தச் சம்பவம் குறித்து கண்டனம் தெரிவிக்குமுகமாகவுமே செயலகம் மூடப்பட்டது.

நேற்றுக் காலை செயலக முன்றலில் நடைபெற்ற ஊழியர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கிணங்கவே சகல ஊழியர்களும் வெளிநடப்புச் செய்தனர்

'எமது செயலக ஊழியர் திரு எஸ். அருள்நாதன் அநியாயமாகப் பலியெடுக்கப் பட்டதற்கு சக ஊழியர்களின் ஆழ்ந்த அனுதாபங்களும் அஞ்சலியும்' என்று எழுதப்பட்ட வாசகம் செயலக வாசலில் வைக்கப்பட்டிருந்தது. (உ-5)

# அடகு நகை மீட்டு வந்தோர் மீது ஹெலிசூடு! இருவர் மரணம்!!

—; அலுவலகச் செய்தியாளரும், பலாலி செய்தியாளரும் :—

யாழ்ப்பாணம், ஜூன் 7

பலாலி இராணுவமுகாமில் அடகுநகை மீட்டு வந்தவர்களை நோக்கி நேற்று ஹெலிக்கொப்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனல்இருவர் கொல்லப்பட்டனர் இருவர் காயமடைந்தனர் வான் ஒன்றும் சேதமடைந்தது.

அடகு நகைகளும் சிதறிப் பறந்தன.

இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது:-

நேற்றுக்காலை எட்டு மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பலாலி இராணுவ முகாமில் அடகுநகைகள் மீளக் கொடுபட்டுக் கொண்டிருந்தன.

வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைத்து அதற்குரிய பணத்தை மீளச் செலுத்தியவர்களுள் ஒரு பகுதியினரே தமது நகையைப் பெற நேற்று முகாம் பகுதிக்குச் சென்றனர்

நண்பகல் பன்னிரண்டு மணியளவில் அடகுநகைகள் வழங்கி முடிவடைந்ததும் இவர்கள் தாங்கள் வந்திருந்த வாகனங்களிலேயே வயாவிளான்வழியாகத் திரும்பினர்.

அவற்றுள் ரேசா வானும் ஒன்று. இந்த

(8ம் பக்கம் பார்க்க)

## அரச அதிகாரிகள் தப்பிப் பிழைத்த

### மயிர்க்கூச்செறியும் அனுபவம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

கிளிநொச்சியில் வியாழக்கிழமை நடைபெற்ற 'ஷெல்' தாக்குதல்களில் இருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பிப் பிழைத்த அரச அதிகாரிகள் அங்கு மயிர்க்கூச்செறியும் அனுபவம் ஒன்றைப் பெற்ருர்கள் என அறியவருகிறது.

அந்த அதிகாரிகளுள் ஒருவர் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை சஞ்சீவிக்கு விவரித்தபோது இது தெரியவந்தது.

யாழ் அரச அதிபர் திரு பஞ்சலிங்கம், பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. குலசேகரம், கணக்காளர்களான திரு. ராசநாயகம், திரு. மரியநாயகம் ஆகியோரே இந்த அனுபவத்தைப் பெற்றனர்.

அந்த அதிகாரி மேலும் சொன்னதாவது:

சூட்டுச் சத்தங்களின் மத்தியில் லொறியில் வந்து கொண்டு இருந்தோம்.

திடீரென்று ஒரு ஷெல் லொறியின் முன்னல் 50

(8ம் பக்கம் பார்க்க)

## அடகு நகைகளைப் பெற பலாலிக்கு போகாதீர்!

### வாடிக்கையாளர்களை கோருகிறது சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

அடகுவைக்கப்பட்ட நகைகளை மீளப் பெற்றுக் கொள்ளுவதற்காக பலாலி இராணுவ முகாமுக்குச் செல்ல வேண்டாம் என்று அடகு வைத்தோர் சங்கம் வாடிக்கையாளர்களை அறிக்கை மூலம் கேட்டுள்ளது

நேற்று அடகுவைத்த நகைகளை மீளப் பெறச் சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்த!! சம்பவத்தைத் தொடர்ந்தே ஜூன் 7, 8 ஆம் திகதி நகைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்காக பலாலி இராணுவ முகாம் செல்ல வேண்டாம் என்ற இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வங்கி நிர்வாகத்துடன் பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றி ஓர் உறுதியான ஏற்பாடு செய்த பின்னர் புதிய திகதிகள் அறிவிக்கப்படும் என்றும் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்றைய சம்பவத்தில் இறந்தவர்கள், காயமடைந்தவர்களுக்கு சங்கம் அனுதாபம் தெரிவித்துள்ளது. (உ-எ)

## கிழக்கு பயணிகளுக்கு மாஹோவில் வேறு ரயில்

மட்டக்களப்பு, ஜூன் 7

மட்டக்களப்பு, திருமலை ஆகிய இடங்களிலிருந்து ரயிலில் கொழும்பு செல்லும் பயணிகள், மாஹோவில் வைத்து வேறொரு ரயிலில் கொழும்புப் பயணத்தைத் தொடர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, திருமலை ரயில்பயணிகள் மாஹோவில் வைத்து பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே கொழும்பு செல்லும் ரயிலில் ஏறிப் பயணஞ் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆனல் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு, திருமலைக்குச் செல்லும் ரயில் பயணிகளுக்கு மாஹோவில் இறங்கி வேறு ரயிலில் செல்லும் கட்டுப்பாடு கிடையாது.

கொழும்பில் இருந்து புறப்படும் ரயில் நேரடியாகவே மட்டக்களப்பு செல்லும். (எ - 21)

### கொள்ளை!

கல்வியங்காட்டிலுள்ள கடை ஒன்றிலிருந்து நேற்று இரவு பணமும் வேறு பல பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டன.

இனந் தெரியாத ஒரு கோஷ்டியினரே இந்தக் கொள்ளையை நடத்தியதாகவும்—

இதுதொடர்பாக இளைஞர் குழு ஒன்று விசாரணை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ- 10)

## வெளியூர் தொலைத்தொடர்பு 'அவுட்'!

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்குடாநாட்டில் இருந்து வெளியூர்களுக்கான தொலைபேசித் தொடர்புகள் நேற்றுக் காலை முதல் துண்டிக்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சி தொலைத் தொடர்பு கோபுரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இத் தடை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. (உ-எ)

## செய்திச் சாரம்

### நகரில் ஷெல் குண்டு

யாழ்ப்பாணம் ஜூன் 7

யாழ் நகரில் நேற்று இரவு 9 மணி முதல் 10-30 மணி வரை பரவலாக ஷெல் குண்டுகள் வந்து விழுந்து வெடித்தன.

கோட்டைப்பக்கத்தில் இருந்து குண்டுகள் ஏவப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஏற்பட்ட உயிர் உடைமை இழப்புகள் பற்றி தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ)

### பென்ஷன் பத்திரங்களும் எரிந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 7

உணவு முத்திரைகளோடு கிளிநொச்சியில் எரிந்த லொறியில் கம்பியூட்டரில் தயாரிக்கப்பட்ட பென்ஷன் பத்திரங்களும் இருந்தன

இப்படி யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ் செயலகத்துக்குத் தேவையான வேறு பல தஸ்தாவேஜுகளும் இந்த லொறியில் கொண்டு வரப்பட்டன

அனைத்துமே எரிந்து சாம்பாராகி விட்டன எரிந்துபோன தஸ்தாவேஜுகளின் பட்டியல் ஒன்று யாழ் செயலகத்திலுல் தயாரிக்கப்பட உள்ளது.

இப்படி அந்த அதிகாரி சொன்னர். (உ-எ)

### ஓய்வூதிய கொடுப்பனவு தினங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 7

தபால் கந்தோர் ஊடாக ஓய்வூதியம் பெறுவோருக்கு அதற்கான கொடுப்பனவுகள் வழங்கும் புதியதிகதிகளை யாழ் பிரதம தபால் நிலையம் அறிவித்துள்ளது.

யாழ் விளையாட்டரங்கில் வைத்து இவர்களுக்கு பென்ஷன் வழங்கப்படும்.

விவரங்கள் வருமாறு:-

ஜூன் 11: ஊர்காவற்றுறை, அச்சுவேலி, புங்குடுதீவு, சுழிபுரம்.

ஜூன் 12: அளவெட்டி, காரைநகர், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

ஜூன் 13; கரவெட்டி, வல்வெட்டித்துறை. சங்கானை, கொடிகாமம்.

ஜூன் 16: யாழ்ப்பாணம், சைதடி. (உ-எ)

### அரச அதிபர் டிராக்டரில் வந்து சேர்ந்தார்

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் உட்பட ஏனைய யாழ் செயலக அதிகாரிகள் கிளிநொச்சியிலிருந்து டிராக்டர் மூலம் இயக்கச்சியை அடைந்து பின்னர் வேறு வாகனங்களின் உதவியுடன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கொழும்பிலிருந்து கடந்த புதன்கிழமை புறப்பட்ட யாழ் அரசாங்க அதிபரும் ஏனைய உயர் அதிகாரிகளும் கிளிநொச்சியில் நடைபெற்ற பயங்கர குண்டுவீச்சில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினர் என்பது தெரிந்ததே.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நின்ற இவர்கள் இரண்டு டிராக்டர்கள் மூலம் இயக்கச்சி வரை பயணம் செய்தனர். (உ- 10)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் குண்டு வெடிப்புகள்

## இரட்டைக் கேள்விக்கு பதில் எது?

இது ஒரு மொழி பெயர்ப்புக் கட்டுரை

"போரும் சமாதானமும்; இறுதிக் கட்டம் ஒன்று" என்ற தலைப்பில் கொழும்பு தாக்குதல்களுக்கு ஏன் இலக்கானது? என்பது பற்றி 'லங்கா கார்டியன்' மே 15 இதழில் அதன் ஆசிரியர் திரு மெர்வின் டி சில்வா எழுதியிருக்கிறார்.

அக் கண்ணோட்டத்தின் தமிழாக்கம் இன்று இங்கு பிரசுரமாகிறது.

அனுராதபுரம் படுகொலை! கடந்த ஆண்டு இடம் பெற்ற இச் சம்பவம் சிங்களவருக்கு உளவியல் ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஒன்றுக்குமே பாதுகாப்பு இல்லை, புனித ஸ்தலத்தையும் சேர்த்துத்தான்

இந்த எண்ணத்தை அனுராதபுரம் படுகொலை ஏற்படுத்தியது.

சிங்களவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்; திருப்பித் தாக்கவில்லை என்பதை அறிந்து அரசு அமைதியானது

பேச்சுக்களை நடத்துங்கள் என்ற புதுடில்லியின் அவசரக் கோரிக்கைகளுக்கு இலங்கை அரசு நம்பிக்கையுடன் செவிசாய்த்தது.

ஆகவே இரத்தம் வழிந்தோடிய அனுராதபுரம் படுகொலைப் பாதை இமாலய உச்சியில் இருக்கும் திம்புவில் சமாதான மாநாடு நடக்க வழி வகுத்தது.

திம்புப் பேச்சுக்களில் எஞ்சியது இரண்டு தஸ்தாவேஜுகள். இலங்கை அரசு, தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் எம்பிக்கள் ஆகியவர்களுக்கு இடையே பொது உடன்பாடு ஒன்றைக் காண இத்தஸ்தாவேஜுகள் தவறி விட்டன

தரையில் நடக்கும் யுத்தத்தையும் நிறுத்த இவைதவறி விட்டன.

**நிபுணத்துவம்**

1986 மே, மாதம், 1985 மே மாதத்தை விட முற்றிலும் வித்தியாசமானது.

கட்டுநாயக்கா விமானத்தளம், கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிபுணத்துவமான முறையில் திட்டமிடப்பட்டவை இலக்குகளும் திட்டமிட்டே தெரிவு செய்யப்பட்டன.

இந்த இரண்டில், ஒன்று தேசிய பொருளாதாரத்துக்கு அடிக்கப்பட்ட சாவுமணி, மற்றது சந்தடிமிக்க பாதுகாப்பற்ற தொலைத் தொடர்பு நிலையத்தை இயங்காமற் செய்தது.

ஈழம் அமைப்புக்களில் ஒன்றேனும் இவற்றுக்குப் பொறுப்பு ஏற்கவில்லை- (இது எழுதப்படும் வரை)

உண்மையில் எல்லாரும் கடும் மறுப்புக்களைத் தான் வெளியிட்டனர்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர், கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு ஈரோஸே பொறுப்பு என்று குற்றஞ் சாட்டினார்

கட்டுநாயக்கா விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்திலும் பார்க்க மத்திய தந்திக் கந்தோர் சம்பவத்தில் இறந்தவர், காயமடைந்தவர் தொகை அதிகம்.

**இவை ஏன்?**

ஏன் இந்தச் சம்பவங்கள்? என்பதே முக்கியமான வினா.

வல்வெட்டித்துறை, தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் சொந்த ஊர். அங்கு பாதுகாப்புப் படையினர் நடத்திய இராணுவ நடவடிக்கைகளுக்குப் பதில் தாக்குதலாகவே அனுராதபுரம் படுகொலையை நடத்தினர் என்பது சிலரின் வாதம்.

எப்படியிருந்தும் அதன் தாக்கம் பேச்சுவார்த்தைக்கு கொழும்பைத் தள்ளுவதே.

அனுராதபுரத்தில் 1986 மே இல் நடந்த தாக்கத்தின் அர்த்தம் என்ன?

எயர் லங்கா குண்டு வெடிப்பு நாட்டின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்துவதே என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி சரியாகத்தான் சொன்னார்.

உல்லாசப்பயண ஹோட்டல்களில் பதிவு செய்யப்பட்ட அறைகள் எல்லாம் எயர்லங்கா சம்பவத்தைத் தொடர்ந்து உடனடியாக ரத்தானது அந்தக் கூற்றை நிரூபிக்கின்றது.

4, 5 ஸ்டார் ஹோட்டல்கள் பெரும்பாலும் காலியாக உள்ளன.

ஜப்பானிய உல்லாசப் பயண சந்தையில் இது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஜப்பானிய உல்லாசப் பயணிகளில் 80 சத வீத மாலைதீவு போகும் வழியில் அல்லது திரும்பும் வழியில் இலங்கை வந்து செல்பவர்கள். இனி கொழும்பு அந்த இடத்தை வகிக்காது.

**தாக்குதல்கள் தரும் தகவல்**

விமானப் போக்குவரத்துப் போன்று, தொலைத் தொடர்பும் முக்கியமானது மத்திய தந்திக் கந்தோர் முக்கிய கேந்திர நிலையம்.

ஐரிஷ் விடுதலை இராணுவம் (ஐ. ஆர் ஏ) நடத்துவது போன்ற இத்தாக்குதல்கள் ஐ. ஆர். ஏ. வழங்கும் தகவலைத்தான் வெளிப்படுத்தியுள்ளது.

"உங்கள் சொந்தத் தலைநகரிலேயே எம்மால் தாக்குதலை நடத்த முடியும்" இதுதான் அந்தத் தகவல்.

ஐ.ஆர்.ஏ யினால் தென் பகுதியில் இலக்குகள் மீது தாக்குதல்கள் நடத்துவதற்கு இராணுவத் தகுதி வரையறுக்கப்பட்டே உள்ளது.

பிரிட்டிஷ் அரசுக்கும் ஐரிஷ் விடுதலை இராணுவத்துக்கும் உள்ள பலம் இதில் முக்கியபங்கு வகிக்கின்றது.

பிரிட்டிஷ் அரசின் இராணுவ பலம் உறுதியான நிலையில் இருக்கின்றது. அதனால் ஐரிஷ் விடுதலை இராணுவத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது; இது 'ஐ. ஆர். ஏ யின் நடவடிக்கைகள். தென்பகுதியில் சாதாரண வாழ்க்கையை குழப்பக் கூடியனவாக இல்லை. இதனால்தான் பிரிட்டிஷ் பிரதமருக்கு, ஐரிஷ் குடியரசு அரசுடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்யக்கூடிய நம்பிக்கை ஏற்பட்டது.

**இங்கு சாதகமில்லை**

இலங்கை அரசுக்கு பூகோள ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பாதகமான நிலை நிலவுவதால், பிரிட்டிஷ் அரசால் ஐரிஷ் இராணுவத்தைச் சமாளித்து வரும் நிலையை இங்கு ஏற்படுத்த முடியாமல் கொழும்பு இருக்கிறது.

கொழும்பு மாநகரில் வெடிகுண்டுச் சம்பவங்கள் இடம் பெறுவதற்கு இதுவே முக்கிய காரணம்.

இதனால்தான் ஏன்? என்ற எமது கேள்விக்கு விடை கிடைப்பதாக இல்லை.

கொழும்புத் தாக்குதல்களை நடத்துபவர்கள், என்ன செய்தியைச் சொல்ல முயல்கின்றனர்கள்?

● புதுடில்லி ஊடாக பேச்சுவார்த்தைகளை அவசரமாக நடத்தி கூடுதல் உரிமைகளை வழங்கி உடன்பாடு ஒன்றைக் காணும்படி கொழும்பு அரசுக்குக் கூற முயற்சிக்கிறார்களா?

● கொழும்பு புதுடில்லிப் பேச்சுக்களில் வெளிவரும் தீர்வு எதையும் 'வீட்டோ' செய்வோம் என்று இந்த ஆயுதக் குழுக்கள் அல்லது குழு கொழும்புக்கும் புதுடில்லிக்கும் எச்சரிக்க விரும்புகின்றதா?

முதல் கேள்வி சரியானது என்றால், கொழும்புத் தாக்குதல்களை நடத்தியவர்கள் இரண்டு தமிழ்க் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வுக்கு உடன்படுவார்கள் என்று எண்ணலாம்.

மாகாண சபைகளுக்கு குறிப்பிடத்தக்க அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இணைப்பு இல்லாவிடினும் மாகாணங்களுக்கு இடையேயான இணைப்பை ஏற்படுத்த வேண்டும் - இதுவே அந்த இரண்டு கோரிக்கைகள். ஜனாதிபதி ஜெயவர்த்தன, மற்றும் அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி காமினி திஸநாயக்கா ஆகியவர்களுடன் கொழும்பில் சிதம்பரம் குழு பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்த சமயம், வடபகுதியில் சில சம்பவங்கள் இடம் பெற்றன.

இரண்டாவது கேள்வி; அந்தச் சம்பவங்களை சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது. ➤

(எ)

# தலைநகர் - யாழ் பயணம் பாலைவனப் பயணமாகிறது

-தீபன்ராஜ்!-

## கடந்த செவ்வாய் வந்தவர்கள் காட்டுவழி நடந்த பரிதாபம்

வானத்தைப் பார்க்கின்றார்கள்.

காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கிறார்கள்.

வேட்டுச் சத்தங்கள் கேட்கின்றதா என்ற மனப்பீதி ஒரு புறம்.

மூடை முடிச்சுக்களைச் சுமந்து கொண்டு நடக்கத் தொடங்குகின்றார்கள்.

காட்டுப்பாதை மனித நடமாட்டமே கிடையாது. இளைஞர்கள் சிலர் வழி காட்டுகின்றார்கள்.

நாடுவிட்டு வேறு நாடு செல்லும் நாடோடிகளா இவர்கள்?

இல்லவே இல்லை. நாட்டின் தலைநகரில் இருந்து பிறந்த மண்ணுக்கு வந்து கொண்டிருந்தார்கள்

குழந்தைகள், யுவதிகள், வயோதிபர்கள், பெண்கள், வெளிநாட்டில் உழைத்து விட்டு திரும்பியவர்கள்.

அந்த நாளில் யாழ்— கொழும்புப் பயணம் என்றால் சொகுசுப் பயணம்.

பஸ்களிலே ஏறிக் கொண்டால்...... அப்பப்பா என்ன சொகுசுப் பயணம் இன்னிசை காதுக்கு, கண்ணுக்கு திரைவிருந்து. இன்று... நினைக்கவே முடியாத பயங்கரம்.

கடந்த செவ்வாய்க் கிழமை, அது தான் இம் மாதம் மூன்றும் திகதி நள்ளிரவு 'அந்த நாளைய' சொகுசு பஸ்கள் பயணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்பில் இருந்து யாழ் நோக்கிப் புறப்பட்டன.

ஒரு பஸ் புறப்படும் முன்னரே, காடையர் கூட்டம் அதற்கு மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்க முயன்றது. பயணிகள் அதனை அணைத்து பயணத்தைத் தொடர்ந்தனர். இன்னொரு பஸ் வத்தளை பேலியகொட வீதியில் வந்துகொண்டிருந்த சமயம் கல்வீச்சுக்கு இலக்கானது. ஒரு தமிழ் இளைஞர் கல்வீச்சால் காயமுற்றார்.

வத்தளை பொலீஸ் நிலையத்தில் இது சம்பந்தமாக முறையிடப்பட்டது. அந்த இளைஞர் ஆஸ்பத்திரியில் அங்கு அனுமதிக்கப்பட்டார்.

எரிப்பு முயற்சி, கல்வீச்சு ஆகியவற்றின் மத்தியிலே யாழ் பயணிகள் பிரயாணத்தைத் தொடர்ந்தனர்.

**வவுனியா வந்தன**

வவுனியாவுக்கு பஸ்கள் ஒருவாறு வந்து சேர்ந்தன. பயணிகளுக்கு அப்போது தான் கிளிநொச்சிச் சம்பவம் தெரியவந்தது.

[illegible] முறிகண்டிக்கும் இடை[illegible] ஊடாக பஸ்கள் பரந்தனை புதன்கிழமை நண்பகல் 12மணிக்கு அடைந்தன. பரந்தன் நவஜீவனத்திலும் வை. எம். சி. ஏயிலும் பயணிகள் அன்று இரவு தங்கினர். பஸ்களும் அங்கு தான் நின்றன.

எப்படி யாழ்ப்பாணம் போவது? இதுதான் பயணிகள் மத்தியில் எழுந்த கேள்வி.

பஸ்கள் தொடர்ந்து யாழ் செல்லாது என்று பஸ் ஊழியர்கள் கூறிவிட்டனர்.

"பயணிகள் விரும்பினால் கண்டாவளை மட்டும் கொண்டு போய் விடுவோம். அதன் பின்னர் பயணிகள் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்"— இந்தக் கூற்றை ஏற்றுக்கொண்ட சுமார் 80க்கும் அதிகமான பயணிகளை கண்டாவளையில் கொண்டு வந்து இறக்கி விட்டு பஸ்கள் பரந்தனுக்குத்திரும்பிச் சென்றன.

**நடந்துபோகும் விஷப் பரீட்சை**

அதன் பின்னர் விஷப் பரீட்சையில் இறங்கினர் பயணிகள். நடக்கத் தொடங்கினர் அடர்ந்த காடு.

நாலாபுறமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தனர்.

வானத்தையும் அடிக்கடி பார்த்துக்கொண்டனர், 'வல்லூறுகள்' திடீரென்று வந்துவிடுமோ என்று பயந்து.

ஊர் விட்டு ஊர் செல்லும் நாடோடிக் கூட்டம் போன்று மூடை முடிச்சுக்களை சுமக்க முடியாமல் சுமந்துகொண்டு நடந்தனர்.

ஒரு மைலா? இரண்டு மைலா? 12 மைல்கள் நடந்தனர். தாகத்துக்குத் தண்ணீரே கிடையாது. தற்போதய அடக்கு முறையில் இருந்து 'விடுதலை' கிடைத்தால் எப்படியிருக்கும்!

அந்த உணர்ச்சியை அடைந்தார்கள். இடைக்கிடை தெரிந்த நீரோடைகளில் தெளிந்த தண்ணீரைக் கண்டவுடன்.

இளைஞர்கள் அவர்களை வழிநடத்திச் சென்றனர். வண்ணான் குளம், தொடுவாய், வெற்றிலைக் கேணி வழியாக நடந்தனர். உடலே இயங்க மறுக்கும் மட்டும் நடந்தனர் இயக்கச்சி வந்தது' களைத்த உடல்களில் இயக்கமும் கண்டது. ஒருவாறு அங்கு தென்பட்ட லொறிகளில் ஏறி பளை வந்தனர்.

பளையில் இருந்து பஸ்கள் ஏறி ஊர்களுக்குப் போய்ச் சேர்ந்தனர். 40 மணித்தியாலம் பயணம்.

செவ்வாய் நள்ளிரவு கொழும்பில் இருந்து புறப்பட்டவர்கள், வியாழன் மாலைதான் யாழ் வந்து சேர்ந்தனர்.

கிளிநொச்சி முற்றுகை மூன்று தினங்களாக நடக்கிறது

அதைத் தொடர்ந்து இப்படித்தான் யாழ் கொழும்புப் பயணம் அமைந்துள்ளது.

இவ்வாறுதான் யாழ் பயணிகள் யாழ் குடாநாட்டுக்கு வந்துகொண்டிருக்கின்றனர். கொழும்பு— யாழ்ப்பாணம், சஹாராப் பாலைவனப் பயணமாகிவிட்டதா? இந்த உணர்வுதான் ஏற்பட்டுள்ளது. ★

# ஸக்காத் என்னும் செல்வ வரி

# இது ஓர் சிறப்பு நிலைத் தருமம்

இப்போது நடப்பது ரம்ழான் மாதம். இஸ்லாமிய பெருமக்களின் நோன்புக்காலம் இது. அதனையொட்டி இக்கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம்.

புனித ரம்ழானில் கொடுக்கப்படும் ஸக்காத் என்னும் செல்வ வரி இஸ்லாத்தின் கட்டாய கடமையாகவும்

## இஸ்லாத்தின் கட்டாய கடமைகள்

### ஐந்தில் இது மூன்றாவதாக அமைகிறது

இறைவணக்கமாகவும் கருதப்படுகின்றது செல்வந்தர்களிடையே உலோபித்தனத்தை அகற்றி, இரந்து வாழும் தன்மையை, வறுமையை சமூகத்திலிருந்து நீக்க பொருளாதார அபிவிருத்தி ஏற்பட இது கடமையாக்கப்பட்டுள்ளது.

செய்யும் நற்செயல்களுக்கு ரம்ழான் மாதத்தில் இறைகூலி அளவிட முடியாது. அதனால் ரம்ழான் மாதத்தில் ஸக்காத் கொடுப்பது வழக்கமாகும். இருதயசுத்தியோடு, பயபக்தியோடு இறைதிருப்தியை நாடி ஸக்காத் கொடுக்கப்பட வேண்டும். ஸக்காத்தின் பர்ளுகள் இரண்டு முதலாவது நிர்ணயம் என்னும் நிய்யத், "எனது உடைமைகளுக்குரிய பர்ளான ஸக்காத்தைக் கொடுக்கின்றேன்" என்பது அந்த நிய்யத். இரண்டாவது பர்ளு இஸ்லாம் காட்டிய பிரகாரம் யார் யார் ஸக்காத் பெறுவதற்கு அருகதையுடையவர்களோ அவர்களுக்குக் கொடுப்பது.

அன்று இஸ்லாமிய ஆட்சியில் ஸக்காத் என்னும் செல்வவரி பைத்துல்மால் என்னும் பொதுநிதியில் கொண்டு போய் சேர்க்கப்படும். அதற்கு ஒரு பொறுப்புதாரி: ஸக்காத் வசூல் செய்பவர்கள் பலர். இன்றைய திறைசேரி போன்று அன்று பைத்துல்மால் செயல்பட்டது. ஒருபகுதியில் முஸ்லிம்கள் வாழ்ந்தால் அந்தப் பகுதி முஸ்லிம் சமூகமே ஒன்று கூடி பைத்துல்மால் ஊழியர்களை தெரிவு செய்யவேண்டும். தெரிவு செய்யப்படக் கூடியவர்கள் பயபக்தியுடையவர்களாகவும் பெருமானாரின் நடைமுறைகளைச் சொல்லிலும் செயலிலும் கைக் கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும். இவை அவர்களுக்குரிய தனித் தகைமைகள். முழு முஸ்லிம் சமூகத்தின் அங்கீகாரம் இன்றி முஸ்லிம்களில் ஒரு கூட்டம் ஸக்காத் வசூலிப்பதற்கோ, பைத்துல்மால் நிதியை வசூலிப்பதற்கோ இஸ்லாத்தில் அனுமதியில்லை.

பைத்துல்மாலில் சேரும் பணம், பொருள்கள் உரிய முறைப்படி உரியவர்களுக்கு தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பகிர்ந்தளிக்கும் விடயத்தில் வசூலிப்பவர்கள் இறைத்தண்டனைக்குப் பயந்தவர்களாகவும், கண்ணும் கருத்துமாகவும் இருக்க வேண்டும்.

### அகமது கரீம் அக்பர் ஜின்னா

ஸக்காத் என்பது செல்வ வரி. ஸதகா என்பது நன்கொடை. இவை இரண்டும் தர்மத்தைச் சேர்ந்தவை. வேறுபாடு கொண்டவை. முன்னையது பர்ளு பின்னையது ஸுன்னத். ஸக்காத் குறிப்பிட்ட பொருள்கள் மீது, குறிப்பிட்ட சிலர் மீது கடமையாகிய, நிபந்தனையுடன் இஸ்லாம் குறிப்பிடும் எட்டுக் கூட்டத்தினருக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் ஸதகாவோ எவரும் எவருக்கும் எப்பொருளிலும் எவ்வளவும் கொடுக்கலாம். பொதுவிடயங்களுக்காக ஸக்காத் பணம் செலவு செய்யப் படக் கூடாது. ஸதக்காவுடைய பணம் எந்த நோக்கத்துக்காக செலவு செய்யக் கொடுபடுகின்றதோ அந்த நோக்கத்துக்காக செலவு செய்யப் படவேண்டும்.

பைத்துல்மால் என்ற பெயரில்ஸக்காத்துடைய பணம் வசூல் செய்யப்பட்டால் தாராளமாகக் கொடுத்துதவும் நம்செல்வந்தர்கள் அந்தப் பணம் ஸரியத்துடைய சட்டப்படி உரியமுறைப்படி உரியவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றதா? என்பதை அவதானிக்க வேண்டும். இது செல்வந்தர்களுக்குரிய பர்ளான கடமையாகும்

ஸக்காத் எட்டுக் கூட்டத்தார்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இவர்களைத்தவிர வேறு எவரும் ஸக்காத் பெற அருகதையற்றவர்கள். வழிப் போக்கர்கள், அல்லாஹ்வின் பாதையில் நியாகம் செய்பவர்கள் கடனாளிகள் நவமுஸ்லிம்கள், பக்கிர் என்னும் பரம ஏழைகள், மிஸ்கீன்கள் என்னும் சாதாரண ஏழைகள், உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள், ஸக்காத் வசூலிப்பவர்கள் ஆகிய இவர்கள் அந்த எட்டுக் கூட்டத்தினராகும்.

எமது நாட்டைப் பொறுத்தவரை ஸக்காத் அறவிடப்பட வேண்டிய பொருட்கள் வருமாறு; தங்கம், வெள்ளி, பணம், நெல், தானியவர்க்கங்கள், திராட்சைப்பழம், ஆடு, மாடு, மற்றும் வியாபாரச் சரக்குகள் இவை ஒவ்வொன்றிற்கும் ஸக்காத் வரி அறவிடப்படக்கூடிய விதிமுறையை இஸ்லாம் வகுத்துத் தந்துள்ளது பணத்துக்கும், வியாபாரப் பொருட்களுக்கும் அப்போதைய விலைப் பிரகாரம் வருட முடிவில் கணக்கிட்டு நூற்றுக்கு இரண்டரை வீதம் ஸக்காத் கொடுபடவேண்டும். எத்தரம் உள்ள வியாபாரியாய் இருந்தாலும் அன்னவருக்கு வரவேண்டிய கடன் பணத்துக்கும் ஸக்காத் கொடுபடவேண்டும்.

தானியங்களைப் பொறுத்தவரை சூடடித்து, அறுவடை செய்த உடனேயே அதற்குரிய ஸக்காத் கொடுபட வேண்டும். வருடம் முடிய வேண்டும் என்ற நிபந்தனை இதற்குஇல்லை. மேய்ச்சல் ஆடுகள் 40 இருந்தால் அதற்குரிய ஸக்காத் இரண்டு வயது பெண் ஆடாகும். மாடுகள் 30 இருந்தால் ஒரு வயதுக் காளைக் கன்று அதற்குரிய ஸக்காத்தாகும். தானியங்களைப் பொறுத்தவரை 10 சத வீதம் ஸக்காத்தாகும். இருப்பில் ஒருவருடகாலம் ஒன்றரை ருத்தல் வெள்ளி இருந்தால் இரண்டரை சதவீதம் ஸக்காத்தாகும். ஒரு வருட இருப்பில் மூன்றரை அவுன்ஸ் தங்கம் இருந்தால் இரண்டரை சதவீதம் ஸக்காத்தாகும். திடீர் அதிர்ஷ்டமாக ஒருவருக்குப் புதை[illegible] வீதம் ஸக்காத் கடமையாகின்றது. ★

## அரசாங்க அலுவலகங்களில்

"சிகதி"

### ஓய்வூதியத் தாமதம்

திணைக்களங்கள் காலத்திற்கு காலம் விடுக்கும் சுற்று நிருபங்கள் பல அர்த்தமுள்ளவையாகும். பொது மக்களுடன் தொடர்புள்ள சில திணைக்களங்கள், மக்கள் நன்மை கருதி தெரிவிக்கும் விதிமுறைகளை மக்கள் ஏற்று நடக்கும் பட்சத்தில் அவை பல கஷ்டங்களை குறைத்துக் கொள்ள வழி செய்யும்.

அண்மையில் யாழ் அரசினர் ஆஸ்பத்திரி அத்தியட்சகர் தயாரித்த விதிமுறைகளைப் பேணி ஒத்துழைப்பு வழங்குவது நோயாளிகளுக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் பெரும் ஆறுதலைக் கொடுக்க வசதி செய்துள்ளதாகக் கருதலாம். இது போன்ற விதி முறைகள்- இன்றைய சூழ்நிலையில் மிக வேண்டியவையாகும். இவை போன்றவற்றை பிற திணைக்களங்களும் பொது மக்களுக்கு நினைவுபடுத்தல் நன்று.

தற்போதய தனியார் போக்குவரத்து சேவை நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு 'கட்டண நிர்ணய சபை' ஒன்று இருந்தது. அதன் தீர்மானப்படியே கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டன. இன்று தனியார் பஸ்சேவையை மேற்பார்வை செய்ய திணைக்களம் இருந்தும், அது உரிய முறையில் கண்காணிப்பு செய்யப் படுவதாகத் தெரியவில்லை. இ. போ. ச. கட்டணத்திலும் பார்க்க தனியார் சேவைக் கட்டணம் குறைவாக இருக்கக் கூடாதென்பது இ. போ. ச. வின் சித்தாந்தம். பாதைக்கு பாதை வித்தியாசப்படும் கட்டண உயர்வை யார் தடுக்க முடியும்? இவை எல்லாம் தாராள பொருளாதார கொள்கையின் பெறுபேறுகள் தான் என்று கொள்ள வேண்டுமோ?

தாராள இறக்குமதிக் கொள்கையின் காரணமாக யாழ்மாவட்டத்தை பொறுத்தவரையில் பல தொழில் நிறுவனங்கள் தொடர்ந்தும் இயங்க முடியாத நிலையில் உள்ளன. இத்தொழில்களை ஆரம்பத்தில் ஊக்குவிக்க கைத்தொழில் திணைக்களத்தினர் இன்று நியாயப்படுத்த முடியாத காரியங்களை முன்வைத்து தொடர்ந்தும் செயற்படுத்தமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளனர். அதனால் பல பணியாளர்கள் வேலை இழந்துள்ளனர். அத்துடன் ஆரம்ப நிலையில் உள்ள தொழில் நிலையங்களுக்குக் கடன் பெற முடியாத கட்டுப்பாடுகளையும் அரசு ஏற்படுத்தி இத்தொழில்களை மேற்கண்டவர்களது பணத்தை முடக்கியதுடன் மேலும் அவர்களைப் பணச்சிக்கலுக்கு ஆளாக்கியது.

உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கம் என்று பேச்சளவில் கூறப்பட்ட போதிலும் நடைமுறையில் எல்லாம் இறக்குமதியே இதனால் இப்பகுதியில் ஈடுபட்டிருந்த மின்தறி ஆலைகள் யாவும் செயலிழந்தன. தரம், திறமை இருந்தும் உற்பத்தியில் ஏற்றம் காண முடியவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னர் அரசினர் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் இக்கால கட்டத்தில் இலங்கை துணி உற்பத்தியில் தன்னிறைவு காணலாம் என தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. ஆனால் 1977ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட மாற்றம், அறிக்கையைத் தயாரித்த வல்லுனர்களைக் கூட கொள்கையில் மாற்றம் அடையச் செய்துவிட்டது. இதனால் வேலையின்மையும் உறுதிப்பாடற்ற பொருளாதார நிலையும் தோன்றியுள்ளன. கைத்தொழில் திணைக்களத்தினர் இதனை கருத்தில் எடுத்தல் வேண்டும் அல்லது ஏற்கனவே நடைமுறையில் உள்ள கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பு வரையறைகளை ஏற்படுத்தவேண்டும்.

மரணமான அரச ஊழியர் ஒருவரின் மனைவி கடிதங்கள் பல எழுதியும் ஒய்வு ஊதிய படி வழங்குவதில் தாமதம் உண்டாகி இருக்கிறது. நேர

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தண்டமிழ்சேர் அருட்பாடல் சூட்டி
# தொண்டர் சீர்பரவிய சேக்கிழார் பெருமான்

திருவருட் செல்வர் சேக்கிழார் பெருமானின் குருபூஜைத்தினம் வைகாசிப் பூசமாகும். 11 - 6 - 85 புதன் கிழமை அன்று இத் தினம் வருவதால் அதன் சிறப்பினை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

சான்றோர் பலர் வாழ்ந்த தொண்டை நன்னாட்டிலே திருவவதாரம் செய்த சேக்கிழார் சுவாமிகள், தெய்வீக உணர்வு, பல்துறை அறிவு ஆற்றல் காரணமாக சோழ மன்னனாகிய அநபாயனின் அரச சபையை முதன் மந்திரியாக அலங்கரிக்கும் பெருமைக்குரியவரானார். தம் முயிர்க்கு உறுதி எண்ணாது நீதியை எடுத்துரைக்கும் வீரமுடைய வராக திறமையாகத் தனது கடமையை ஆற்றி மன்னனால் "உத்தமச் சோழப் பல்லவன்" என்ற பட்டம் வழங்கப் பெற்றார். அமைச்சர் அறவழி நின்று தனது தொழிலை நடத்தி வருங்கால் சோழமன்னன் சமணச் சார்புடைய சீவக சிந்தாமணியைப் படித்து மகிழ்வதைக் கண்டு அரசனை நல்வழிப்படுத்த விரும்பி திருத்தொண்டர் புராணத்தைக் காப்பிய வடிவமாகப் பாடி சைவமக்களுக்குத் தந்துள்ளார். "உறுதி உழையிருந்தான் கூறல் கடன்" என்ற வள்ளுவர் பெருமான் குறளுக்கு ஏற்பக் கடமையாற்றிய பெருமை சேக்கிழாருக் குரியது.

பெரும்பாலும் எல்லாப் புராணங்களுக்கும் மூலம் வடமொழியாகும். ஆனால் தமிழிலே இயற்றப் பெற்றுப் பின்னர் வடமொழியிலே மொழிபெயர்க்கப் பட்ட நூல் பெரியபுராணம். மக்கள் எல்லோரும் விரும்பிக் கேட்கவும் படிக்கவும் ஏற்ற முறையில், ஒப்பரிய பொருள் விளங்கித் தோன்றவும், அவர்கள் கற்று அதன் வழி நிற்கவும், பெருங் காவியமாக செய்து தரும்படி சோழமன்னன் கேட்க, சிவனடியார்கள் கதையை இலக்கியச் சுவைமிக்க நூலாகப் பாடியுள்ளார்.

புராணங்கள் சமய தத்துவங்களையும், கோட்பாடுகளையும் சகல மக்களும் கற்றுணரும் வண்ணம் தெளிவாகக் கூறுகின்றன. இன்று புராணங்கள் பற்றி தவறான கருத்துகள் மக்களிடையே நிலவுவது வருந்த வேண்டிய ஒன்றாகும். பெரியபுராணம் மூலம் சேக்கிழார் சுவாமிகளுடைய தமிழ்ப் புலமையையும், பரந்துபட்ட அறிவையும், இறை பக்தியையும் நாம் காண முடிகிறது. தமிழ் மக்களுடைய அரசியல், சமய,

## வெவ்வேறு நிலைகளில் நின்று வாழ்ந்த அருளாளர் கதை கூறும் பெரியபுராணம்

சமூக, பொருளாதார கலாசார பாரம்பரியத்தை பெரியபுராணம் அழகாக விளக்கியுள்ளது. சிவனடியார்கள் தாண்டவப் பெருமானின் தனித் தொண்டர்களாக விளங்கி, பஞ்ச பூதங்கள் நிலை திரிந்தாலும் மாதொருபாகனை மறவாதவர்களாக இருந்த காரணத்தால் இறைவன் அவர்கள் உள்ளத்திலே எழுந்தருளினார்.

காடவர் கோமான் என்ற மன்னவன் கட்டிய அழகிய சிவாலயத்திலும் பார்க்க பூசலார் நாயனார் உள்ளத்தில் அமைத்த கோயில் இறைவனுக்கு உகந்த இடமாக விளங்கியது. இறைவன் தொண்டர் உள்ளத்தில் எழுந்தருளி இருப்பதனால் அடியார் பெருமை கூறும் நூல் பெரியபுராணம் என சிறப்பாகக் கூறப்பட்டது. குரு, லிங்க, சங்கம வழிபாடு சைவ மக்களால் வாழ்க்கையில் பின்பற்றப்படுவதற்கு வழிவகுத்தவர் சேக்கிழார் சுவாமிகள் என்றால் மிகையில்லை. அடியார் கூட்டத்தின் சிறப்பு சொல்லும் தரமன்று. அவர்கள் பூசுகின்ற நீறு போல உள்ளும் புனிதர்களாக, புலனைந்தும் வென்ற வீரர்களாக, பேசவொண்ணாப் பெருமை மிக்கவர்களாக, பற்றற்ற நிலையில் பரமனடியே பற்றுக் கோடாகக் கருதி வாழ்பவர்களாக விளங்கினார்கள். இச்சிறப்பு மிக்க மாதவர் கூட்டத்தை தன்னால் விளம்பமுடியுமோ என்ற தயக்க உணர்வு சேக்கிழாரின் அடியார் பக்திக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். பெரியபுராணத்தில், குலத்தால் அந்தஸ்தால், செய்தொழிலால், வாழ்க்கைநெறியால், வழிபாட்டு முறையால் வேறுபட்ட அடியார்கள் - பக்தர்கள் என்ற ஒருமைப் பாடுடையவர்களாக விளங்கினார்கள்.

சேக்கிழார் சுவாமிகளுடைய பல்துறைப் புலமைக்குப் பெரியபுராணம் ஓர் எடுத்துக்காட்டு. மனுநீதிச் சோழன் வரலாறு மூலம் முடியாட்சியின் மாண்பும், தருமநெறி தவறாது குடிமக்களைத் தன்னுயிர் போலக் காக்கவேண்டிய உயர் பண்பும் கடமையும் காட்டப்பட்டுள்ளது. சுந்தரமூர்த்தி நாயனாரைப் பெரியபுராணத்தின் காப்பியத் தலைவனாக அமைத்து அவருடைய வரலாற்றை தொடக்கத்திலும், நடுவிலும், முடிவிலும் கூறி, ஏனைய அடியார்கள் வரலாற்றை இடையே புகுத்தி உயர்ந்த செந்தமிழ்க் காப்பியமாக பாடியதிலிருந்து சேக்கிழார் பெருமானுடைய இலக்கியத் திறன் புலனாகிறது. நாலாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்கள் கொண்ட திருத்தொண்டர் புராணம் மூலம் சேக்கிழார் சுவாமிகள் மக்கள் வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டிய செந்நெறியை வகுத்துக் காட்டியுள்ளார்.

பெரியபுராணத்தில் சுந்தரமூர்த்திநாயனார் திருமணப் பந்தரிலே இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட நிகழ்ச்சி சேக்கிழார் பெருமானை ஒரு சட்ட மேதையாகக் காட்டுகிறது. இன்று நீதி மன்றங்களிலே நடை

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

பெறும் விசாரணைகளுக்கு நிகராக பெரியபுராணத்தில் சம்பவங்கள் அமைந்துள்ளன. விடயத்தை அணுகும் முறையிலும், நிகழ்ச்சிகளை தார்க்க ரீதியாகக் கூறுவதிலும் சேக்கிழார் பெருமான் கைதேர்ந்தவர். ஆவணம், அயலார் தங்கள் சாட்சி, மூல ஓலை, படியோலை ஆகிய சொற்கள் நுட்பமான பொருளை விளக்குவதோடு, நூலாசிரியரின் சொற்பிரயோகத்தின் சிறப்பையும் எடுத்துக் காட்டுகின்றன.

அடியார்கள் வேட்டையாடுதல், பசுப்பேணல், சலவைத்தொழில், நெசவுத் தொழில், மட்பாண்டத் தொழில் ஆகியவற்றை சிவார்ப்பணமாகச்செய்துள்ளனர். சிவாலயத் தொண்டுகளில் ஈடுபட்ட அடியார்களும் ஈசன் பணியையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர்கள் ஆவர். தொழில்களிடையே ஏற்றத்தாழ்வு கருதாது அவற்றின் மகத்துவத்தை சேக்கிழார் சுவாமிகள் விளக்கி, தொழிற் திறனையும்; செய்பவருடைய மனப்பாங்கினையும் எடுத்துக் காட்டியுள்ளார். பெரிய புராணத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தால் சேக்கிழார் பெருமானுடைய விஞ்ஞான அணுகுமுறையையும் தொழில் நுட்பத்திறனையும் நாம் அறியமுடியும்.

தமிழ் மக்களுடைய கலை, கலாசாரம் பற்றிய செய்திகள் மூலம் சேக்கிழார் சுவாமிகள் ஓர் உயர்ந்த பண்பட்ட சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார். அவர் எடுத்துக்காட்டுகின்ற குடும்ப உறுப்பினர்களுடைய கடமைகள், இலட்சியங்கள், தொடர்புகள் என்பன சைவமக்களுடைய பாரம்பரியமான பெருமைக்கு சான்றாக அமைகின்றன. எக்காலத்துக்கும் யாவருக்கும் ஏற்ற ஒரு சமய காப்பியமாக பெரியபுராணம் விளங்குகிறது. தொண்டர் சீர் பரவிய சேக்கிழார் பெருமான் வைகாசி மாதம் பூசம் கூடிய நந்நாளிலே இறைவனடி சேர்ந்தார். சேக்கிழார் பெருமான் காட்டிய வழி நின்று வாழ்வது சைவ மக்களுடைய தலையாய கடமையாகும். ★

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஒரு காலத்தில் பெரும் புகழ் பூத்து மலர்ந்து விளங்கியது. அது மனேச்சர் அவர்களின் மானசீகக் குழந்தை. அதன் முயற்சியாலேயே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எழுந்தது. வட்டுக்கோட்டை வேளாளன் முத்துக் குமாரு சிதம்பரப்பிள்ளை என்னும் மூத்த நெவின்ஸ் அவர்கள், வெள்ளைக்காரர் மெச்சும் வகையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெரிய உபாத்தியாயராயிருந்த பின், சில மாணாக்கர்கள் பின்தொடர வெளியேறி வண்ணார்பண்ணையில் சுதேசிகளின் சைவ உயர்நிலைப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்தினார்.

அதன் பின் உருவாய சைவபரிபாலனசபையார் அந்த உயர்நிலைப் பள்ளிக்கூடத்தை நடத்தும் பொறுப்பைத்தாமே ஏற்று 1890 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி எனப் பெயரிட்டு நடத்தி வந்தார்கள். காலகதியில் 1911 ஆம் ஆண்டில் உரும்பராய் இந்துக்கல்லூரியும் அதனை அடுத்து கொக்குவில், காரைநகர், சாவகச்சேரி இந்துக்கல்லூரிகளும் அவர்களால் ஆரம்பிக்கப் பெற்றன. அவற்றைத் தொடர்ந்து யுவற்றினருகே சைவத் தமிழ்ப் பாடசாலைகளையும் ஆரம்பித்து நடத்தினார்கள்.

யாழ்ப்பாணத்தில் அந்தக் காலத்தில் பெருவர்த்தகர்களாயும் சுருட்டுத் தொழிலதிபர்களாயும் விளங்கிய வைரவநாதர்சின்னத்தம்பியார், வைரவநாதர் ஆறுமுகம் பிள்ளை என்னும் சகோதரருள், தம்பியார் ஆறுமுகம், ஆறுமுகநாவலர் அவர்கள் வீழ்ந்து வணங்கும் நியதி பூண்டவர் அவர். நாவலர் அவர்களின் நூல்களை யாழ்ப்பாணத்தில் அச்சிடுவதற்காக அந்தக்காலத்தில் அமெரிக்காவிலிருந்து அச்சுயந்திரம் இறக்குமதி செய்து நீராவியடியில் தாபித்தவர்.

சைவப்பிரகாச யந்திரசாலை எனப் பெயரிட்ட அச்சகத்தில் அவர் 1883 ஆம் ஆண்டில் கந்த புராணத்தை இரண்டு பாகங்களாக அச்சேற்றியவர். அது இரண்டாம் பதிப்பாக இருக்கலாம். ஆறுமுகம் அவர்கள் மறைந்தபின் அச்சகம்

## "ஆறுமுக ஐயர்க்கே ஆட்பட்டோம் வேறறங்கள் வேண்டாவினி"

செயற்படாமல் இருக்கக் கண்ட மனேச்சர் அவர்கள், ஆறுமுகம் அவர்களின் மனைவி மக்களிடம் அதனை விலைக்குப் பெறுவதற்கு முன்வந்தபோது, அவர்கள் எவ்வித விலையும் பெறாமல் சைவம் வளர்ப்பதற்குச் சைவ பரிபாலன சபையாருக்கு அன்பளிப்பாகக் கொடுத்ததும், சபையார் அதன் பெயரை மாற்றாமல் சைவப்பிரகாச யந்திரசாலை எனவே அதனை நூறாண்டுகளாகப் பேணிக்காத்து வந்தனர்.

சைவபரிபாலன சபையைப் போற்றி வளர்த்த மனேச்சர் அவர்கள், அந்தச் சபையின் மூலம் சைவத்தமிழைப் பேணிக் காத்துவந்தார். எவ்வித வேதனமோ, சலுகைப் பணமோ பெறாமலே 'இந்துசாதனம்' என்னும் பத்திரிகையைத் துணிவுடன் நடத்தி வந்தார். அப்பத்திரிகை அக்காலத்தில் இலங்கை முழுவதிலும் பரவியதோடு தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, தென்னாபிரிக்கா முதலிய நாடுகளிலும் பரவியது.

மனேச்சர் அவர்களுடைய கட்டுரைகள், கண்டனங்கள், தலையங்கங்கள், கருத்துரைகள் என்றித்திறத்த எழுத்தோவியங்கள் யாவும் தமிழ் கூறும் நல்லுலகம் உவப்ப வெளிவந்தன. அவற்றைத் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் சில வெகுவாகப் பாராட்டி மறுபிரசுரஞ் செய்ததும் உண்டு. அவரின் கண்டன வசனங்கள் எதிரிகளுக்குத் தேள் கொட்டினாற் போல் இருந்தன என்றும் அவரை நன்கறிந்த பெரும் படிப்பாளியாகிய முதலியார் பொன்னம்பலம் குமாரசுவாமி(சேர் இராமநாதன் அவர்களின் அண்ணன்) அவரை நெருப்புக் கொள்ளி (Fire - Brand) எனக் குறிப்பிட்டதும் உண்டு என்பர்.

மனேச்சர் அவர்களின் படைப்புக்களை மாணாக்கராய பிள்ளை அவர்கள் எழுத்தெண்ணிப் படித்தவர். அன்றி மனேச்சர் அவர்கள் மூலம் நாவலர் பரம்பரையில் வந்த நல்லறிவாளர்களையும் அவர்களின் படைப்புக்களையும் நன்கறிந்தவர். நாவலர் பரம்பரையில் வந்தவர்களுள் அவரின் தமையனார் மைந்தனாகிய மனேச்சர் அவர்களும் தமக்கையார் மைந்தனாய வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களும் சிறப்பிடம் பெற்றவர்கள். மனேச்சர் அவர்கள் தமது சிறப்பாவாகிய நாவலர் அவர்களைப் பற்றி 'ஒன்றுஞ் சொல்ல முடியாது' (The highest cannot be spoken) என்று அஞ்சி வாய் பொத்தும் வழக்கம் உள்ளவர். மருகரும் மாணாக்கருமாய வித்துவ சிரோமணி பொன்னம்

★ க. சி. குலரத்தினம் ★

பலபிள்ளையோவெனில் ஆறுமுக ஐயர்க்கே ஆட்பட்டோம் ஆட்பட்டோம் வேறறங்கள் வேண்டாவினி' என்று ஆராமையோடு பாடிப் பணிந்து அமைதல் வழக்கம்.

மனேச்சர் அவர்களின் முயற்சியாலேயே ஆறுமுகநாவலர் அவர்களின் மாணாக்கர்களின் பெயர்களையும் அவர் தம் உபகரிப்புக்களையும் பிள்ளை அவர்கள் நன்றாக அறிந்து பின் சந்ததியார்களுக்குச் சொல்லிப் போயுள்ளார். நாவலர் அவர்களுக்குக் குடாநாடெங்கும் மாணாக்கர்களின் கூட்டம் இருந்தது. குப்பிழான் செந்திநாதையர், வன்னை கனகரத்தின உபாத்தியாயர், வண்ணை சுப்பிரமணியபிள்ளை, மா. வைத்திலிங்கபிள்ளை, நல்லூர் சதாசிவம் பிள்ளை, இணுவில் அம்பிகைபாகர், இணுவில் நடராசஐயர், வண்ணை பொன்னுத்துரை ஐயர், மட்டுவில் வேற்பிள்ளை, நல்லூர் திருஞானசம்பந்தபிள்ளை, கொக்குவில் சபாரத்தின முதலி

(7ம் பக்கம் பார்க்க)

# எங்களுக்கு மட்டும்தானா 'ஷெல்'லைத் தெரியும்?

## கந்தபுராணத்திலும் 'செல்' அடித்திருக்கிறான் சிங்கன்

விஞ்ஞானப் புதுமைகளால் கண்டுபிடிக்கப்பட்ட இக்கால யந்திர சாதனங்கள் அக்கால பண்டைய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இராமாயணத்தில் சொல்லப்படும் புஷ்பக விமானம் தான் இன்றைய ஆகாய விமானமாகும். வேதகால புராண இலக்கியங்களில் சொல்லப்பட்ட கப்பல், பல்லக்கு, ஜலரதம், விமானம் என்பன பற்றிய செய்முறைக் குறிப்புக்கள் அன்று வெறும் குறிப்புக்களாகவே தரப்பட்டவை

இன்றைய விஞ்ஞானப் புதுமைகள் பல அன்று வேத காலத்தவராலும், புராண வித்தகர்களாலும் எடுத்துச் சொல்லப் பட்டவைதான் என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. அத்துடன் தமிழ் மொழியில், சமஸ்கிருதத்தில் இருக்கும் தமிழ்ச் சொற்கள் சில வேற்று மொழிக் குறிப்புகளிலும் காணப்படுகின்றன. இன்று இலங்கை மக்களுக்குக் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு "ஹெலி" "பொம்மர்" "ஷெல்" என்பன தண்ணீர் பட்ட பாடம். கைக்குழந்தைகளுக்கும் இவை இன்று

புதுகொளி

நன்கு தெரிந்த சங்கதி தான். யாழ்ப்பாணத்தை சமீபகாலமாக ஷெல் தாக்கி உயிர் துறப்போர் தொகை அதிகரித்து வருகின்றது. பச்சிளம் பாலர் தொடக்கம் குடு குடு கிழவர் வரை ஷெல் தாக்கி உயிர்ச்சேதம் அடைவோர் தொகை பெருகியுள்ளது. சமீப காலமாகக் கடைகள், வீடுகள், பாடசாலைக் கட்டடங்கள், ஆஸ்பத்திரிகள் போன்ற இடங்களில் ஷெல்கள் செல்வாக்கைக் காட்டியுள்ளன.

இத்தகைய ஷெல் பற்றித் தமிழ் இலக்கியத்திலோ புராண இலக்கியத்திலோ ஏதும் சொல்லப்பட்டிருக்கின்றதா என்பதை ஆராய்ந்து பார்க்க முற்பட்டேன்.

சில சம்பவங்கள் அங்கில்லாவிட்டாலும் கந்த புராணத்திலிருக்கு மென்ற நம்பிக்கை எமக்கு உண்டு எந்தப் புராணத்தில் இல்லாவிட்டாலும்

(7ம் பக்கம் பார்க்க)

# கடல் கடந்த கடிதம்

## ஓடி ஓடிக், குழம்பாதே!

மாலைப் பொழுதுபோக்கு என்ன என்று கேட்டதற்கு எங்கே நேரம் என்று பதிற் கேள்வி கேட்டிருந்தாய்! காலையிலே ரியூசன், மாலையிலே ரியூசன், இடையிலே பள்ளிப்படிப்பு; ஓய்வே இல்லை என்று அலுத்துக் கொள்வது கேட்கிறது.

குழந்தையினது மனவயது, ஆற்றல், மனப்பாங்கு முதலியவற்றைக் கவனியாது மருத்துவராக வேண்டும், பொறியியலாளராக வேண்டும் என்று பெற்றோர் மனக்கோட்டை கட்டுகிறார்கள். பரீட்சைகளிற் புள்ளி பெறுவதற்கும் படி, படி என்று நச்சரிக்கிறார்கள்!

பள்ளியிலே படித்ததை மீட்டிட, ஆழ்ந்து அமைதியுடன் சிந்தித்துச் சிந்தையிற் பதித்திட தம்பி நீ முயற்சிக்கிறாயா? இல்லையே! பள்ளியிலே பாடம் தொடங்குமுன் ரியூசனில் தொடங்குகின்றது-குறிப்புகள் குவிகின்றன. பள்ளிக்குச் சென்றதும் படித்ததுதானே என்று உன் கவனம் குறைகின்றது. பாவம்! ஆசிரியர் - அவர் கவனிப்பும் குறைகின்றது.

பாடத்திட்டம் முடிந்து விடுமா? கலங்குகிறார்கள் பெற்றோர்; கல்வி நிபுணர்களாகிறார்கள். விளைவு? ஒரு பாடத்தின் பல பகுதிகளுக்கே பல இடங்களில் ரியூசன், அங்கிங்கெனாதபடி எங்கும் ஓட்டம்!

அங்கே நல்ல குறிப்புகளாம் - இங்கே நல்ல விரிவுரைகளாம்! இன்ன இடத்தில் வினாவிடைப் பயிற்சியாம்! வேடிக்கை தெரியுமா, தம்பி? பாடப்பகுதியைப் படித்து முடிக்கு முன்பே வினாவிடைப் பயிற்சிக்கு அனுப்புகிறார்கள் பெற்றோர், அதே வினாக்கள் பரீட்சைக்கு வந்துவிடலாம் என்ற நப்பாசையால்!

பாடசாலைகளிலே ஆசிரியர் பற்றாக்குறை, நெருக்கடி நிலையால் பாடத்திட்டம் முடிவதில்லை என்று, தம்பி, நீ முணுமுணுப்பது கேட்கிறது. பள்ளிப் படிப்பை விட மேலதிக உதவி, சில வேளைகளிற் சிலருக்குத் தேவைதான்; மறுக்கவில்லை. எந்தப் பாடத்தில் எவ்வளவு, எங்கே, எத்தகைய உதவி தேவை என்பதை மதிப்பிட்டு உதவி பெறு! முழுப்பாடங்களையும் ரியூசனிலேதான் பெறவேண்டும் என்று பேதலிக்காதே! காலை, மாலை என்று ஓடி, ஓடிக் குழம்பாதே!

- சிவா -

# அமெரிக்க வாட்டர்கேட் போன்று ஜப்பான் 'மார்க்கோஸ் ஊழல்'

'மார்க்கோஸ் ஊழல்' ஜப்பான் நாட்டு அரசியலில் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

1974 இல் ஜப்பான் பிரதமர் தனகாவை பதவி கவிழ்த்த லொக்ஹீட் ஊழல் சம்பவம் போன்று, மார்க்கோஸ் ஊழலும் உருவெடுத்து வருகின்றது.

தற்போதைய ஜப்பான் பிரதமர் யசுஹிரோ நாகசோனிய உடனடியாகப் பைவி கவிழ்க்கும் ஆபத்து ஏற்படவில்லை.

இன்னொரு அரசியல் சூறாவளி உருவாவதற்கான சாயல் அத்தனையும் 'மார்க்கோஸ் ஊழலி'ல் உள்ளது.

ஜப்பானிய அதிகாரிகளைச் சிக்கலில் மாட்டிவிடக்கூடிய தகவல்களை அமெரிக்க காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

மார்க்கோஸுக்கு ஆதரவான போலிக்கம் பெனிகளுடன் மருபேரு கூட்டுத்தாபனம் தொடர்பு வைத்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இக் கூட்டுத்தாபனந்தான் லொக்ஹீட் ஊழலும் சம்பந்தப்பட்டிருந்தது

### அதிகாரி தற்கொலை

'மார்க்கோஸ் ஊழல்' சம்பவத்துக்கு ஜப்பானிய அமைச்சு அதிகாரி ஒருவர் பலியாகிவிட்டார். ஊழல் தகவல்கள் வெளிவந்தவுடன் அந்த அதிகாரி டோக்கியோவில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

லொக்ஹீட் ஊழலும் முன்னர் 4பேரைத் தற்கொலைசெய்ய வைத்தது.

பதவியை விட்டு ஓடி ஹவாயில் போய் இறங்கிய பெர்டினன்ட் மார்க்கோஸிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 2,300 பக்க தஸ்தாவேஜுகளை அமெரிக்க காங்கிரஸின் வெளியுறவு கமிட்டி வெளியிட்டுள்ளது

ஜப்பான் நாட்டுச் சட்டத்தை ஜப்பானியக் கூட்டுத் தாபனங்கள் மீறியதான தகவல்களையும் அத்தனைதாவேஜுகள் வெளியிடவில்லை'

### அது என்ன?

'மார்க்கோஸ் ஊழல் என்றால் என்ன?

பிலிப்பீன்ஸ் நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தும் ஒப்பந்தங்களை ஏனைய நாட்டுக்கம்பெனிகளுடன் போட்டி போட்டுக் கொண்டு ஜப்பானிய நாட்டுக் கம்பெனிகள் எடுத்தன.

இப்படி பெறுவதற்காக பிலிப்பீன்ஸ் ஜனாதிபதியாக இருந்த பெர்டினன்ட் மார்க்கோஸுக்கு லட்சக்கணக்கான டாலர்கள் கமிஷனாக ஜப்பானியக் கம்பெனிகள் வழங்கின.

மார்க்கோஸுக்கு நேரடியாக இக்கமிஷன்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரைக்கு கொம்பு கொடுக்காதது ஏன்?

## அதே தனது கதையைச் சொல்கிறது

என் கண்கள் ஒளியிழந்து பஞ்சடைந்தன. கால்கள் தள்ளாடுகின்றன. எனும் புந்தோலுமாக உடம்பு உலர்ந்து போயிற்று. என் அழகு, அகந்தை, வீரம், கம்பீரமெல்லாம் குன்றிவிட்டன. வயோதிபம் என்னைத் தேடிவந்துவிட்டது. இப்போது நான் மரணத்தை எதிர் பார்த்துக் காத்திருக்கும் ஒரு கிழவன். இந்த வரண்ட புல்வெளியிற் காலங்கழிக்கிறேன்.

முதுமைக் கரையிலிருந்து பார்க்கும்போது, இளமைக்கடலின் காட்சிகள் எவ்வளவோ அழகாகத் தோன்றுகின்றன. இளமை எத்துணை இனிமையானது. துள்ளித்திரிகின்ற அந்தக்காலத்திலே கொழு கொழுவென்று கொழுத்துப் பளபளவென்று ஒளி வீசியது இந்தவுடல். நான் அழகாகவுமிருந்தேன். இளமையும் அழகும் இணைந்துவிட்டால் ஆகா! அவற்றின் மகிமைக்கு ஈடுமுண்டோ?

என் வண்ணமேனியும், ஒய்யாரத் தோற்றமும் வாலிபனொருவனின் கண்களைக் கவர்ந்தன. அவன் என்மீது ஆசை கொண்டான். என் எசமானிடம் அதிக பணங்கொடுத்து என்னை வாங்கினான்.

அந்தவாலிபனோ தனவந்தன். அத்தனவந்தன் வீட்டில் நான் சில வருடங்கள் வசித்தேன். அங்கே நேரந்தவறுத உணவு, அலங்கார ஆடைகள், மனம்போல நல்ல தேகாப்பியாசம், விளையாட்டு, குளிப்புக்கள் எல்லாம் கிடைத்தன. ஆனந்தமான அந்தநாள் மீண்டும் வருமா?

காலம் மாறியது. பயங்கரயுத்தம் தொடங்கியது. தனவந்தனுகிய என் எசமான் இராணுவத்திற் சேர்ந்தார். நானும் யுத்த சேவையிலீடுபட்டேன். நண்பர்களுடன் கூடிச் சில காலம் பலவிதமான யுத்குப் பயிற்சிகள் பெற்றேன். பலராலும் கௌரவிக்கப்பட்டேன்.

போர்க்களத்திலே, குண்டுகளின் பேரிரைச்சல் மத்தியிலே, நான் அனுபவித்த இடர்கள், அஞ்சா நெஞ்சுடன் புரிந்த தீரச்செயல்கள் எத்தனை! எத்தனை! அப்பப்பா! அவற்றை இப்போது எண்ணினாலும் பயத்தால் உள்ளம் நடுங்குகின்றது, உடல் சிலிர்க்கின்றது.

ஒரு நாள் கடூரமான போர் நடந்துகொண்டு இருந்தது. காது செவிடுபடும்படி எங்கும் பீரங்கிகளின் கர்ச்சனை; நாலா பக்கமும் புகைமூட்டம்; பிணங்களும், இடிந்த கோபுரங்களும் பாதைகளை மறைத்துவிட்டன. மழைச்சேறுபோலத் தரையெங்கும் இரத்தச் சேறு, நாலாபக்கமும் அக்கினி வளர்ந்து வந்தது. நானும் எசமானும் நடுவே நின்றோம். தீ நாக்குகள் எங்களைத் தேடிவந்தன. பின்புறமாகப் பகைவரும் துரத்தி வந்தனர்.

"பகதூர் (அது தான் என் பெயர்) பயப்படாதே, தைரியமாயிரு; எதிரேவரும் ஆற்றைக் கடக்கவேண்டும்"

என்று எசமானன் என் முதுகைத் தட்டிக் கொடுத்தார். அவ்வார்த்தைகளில் அவருள்ளம் நடுங்குவது நன்ருகத் தெரிந்தது. 'இனிப் புறப்படுவோம்' என்ருர்.

காற்றிலும் கடுவேகமாகப் பறந்தேன், ஆற்றைக் கடக்குந்தருணம் 'டுமீல்' என்று திடீரென ஒரு வெடிச்சத்தம் கேட்டது 'பகதூர்..பகதூர்...' என்று பதறிக்கொண்டு எசமான் என் தோள்மீது புரண்டு உருண்டு தத்தளித்தார்.

நான் ஆற்றைக் கடந்தேன். அவர் தரையில் விழுந்தார். அவரது மார்பிலே குண்டுபாய்ந்தது. இரத்தம் பெருகி வழிந்துகொண்டிருந்தது. அம்மரணத்தறுவாயிலும் எசமானன் தன் அன்பைக் காட்டினுர் "பகதூர், நீ ஓடு, ஓடித் தப்பிவிடு" என்று கதறினுர். ஆபத்து நேரத்தில் அவரைத் தனியே விட்டு நான் ஓடுவதா? எவ்வளவு அற்பத்தனம்? அவரையும் பற்றித் தூக்கிக்கொண்டு ஓடினேன். போகும் வழியில் அவருயிர் பிரிந்துவிட்டது. வீர சுவர்க்கமேவினுர் எசமானன். துயரந்தாளாமல் நான் அங்கு நின்று கண்ணீர் சொரிந்தேன். எதிரிகளின் கையிற் பிடிபட்டேன். சிலகாலத்தின்பின் நான் பந்தய ஓட்டத்தினருடன் சேர்க்கப்பட்டேன்.

சுகமுந் துக்கமுஞ் சுழலுஞ் சக்கரமல்லவா? என் வாழ்விலும் அவை மாறிமாறியே வந்தன. இன்பத்தையும் துன்பத்தையும் நான் சமமாகவே கருதிவந்தேன். எவ்வளவு இன்பங்கள் இருந்தாலும் சுதந்திரமில்லாத வாழ்வு தானே அடிமை வாழ்வும் பழக்கத்தில் வந்துவிட்டால் அப்புறம் எல்லாஞ் சரியே.

ஆனல், இன்று இப்புல்வெளியில் கிழமாகத் திரிகின்றேன் நன்றியில்லா மனிதர் இப்போது என்னைக் கண்டாற் கல்லெடுத்து எறிகின்றனர். கிழட்டுக் குதிரையென்று கேலிபண்ணுகின்றனர்.

பல தருணங்களில் எனக்கு அளவுக்குமீறி கோபமுண்டாகிறது. கோபங்கொண்டு தான் நான் என்னசெய்ய முடியும்? என் குணத்தை அறிந்துதானே ஆண்டவன் எனக்குக் கொம்புகளைப் படைக்காது விட்டான்.

சரி, விடை பெற்றுக் கொள்கிறேன். வரட்டுமா.

ச கிருஷ்ணதாசன்
(நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை)



### சிறுவர் சுடர்

**ஒன்றுமுதல் பத்துவரை**
'ஸ்ரீ'

ஒன்றே ஒன்று சூரியன்
இரண்டே இரண்டு கண்கள்
மூன்றே மூன்று தமிழ்தான்
நாலே நாலு வேதம்
ஐந்தே ஐந்து கண்டம்
ஆறே ஆறு சுவைகள்
ஏழே ஏழு ஸ்வரங்கள்
எட்டே எட்டுத் திசைகள்
ஒன்பதே ஒன்பது இரத்தினம்
பத்தே பத்து விரல்கள்

# பெண் அடிமைத் தனத்துக்கு ஆண்கள் போக்கும் காரணம்

## பெண்ணிலை வாதம்

பெண்ணிலை வாதம் பற்றிய சர்ச்சையில் நாம் பல்வேறு விடயங்களைப் பற்றி ஆராய வேண்டும். தனியே ஒரு கருத்துக்களை சீர்தூக்கிப் பார்ப்பதால் மட்டும் இப்பிரச்சினைக்கு விடையளிக்கவோ ஒரு தீர்வைக் காணவோ முடியாது.

இதுவரை முன்வைக்கப்பட்ட பிரதிவாதங்களில் சில மிகைப்படுத்தப்பட்டு கூறப்பட்டுள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அதே நேரத்தில் சில வாதங்கள் ஆமோதிக்கப்படக்கூடியனவாகவும் உள்ளன. நமது நடைமுறை வாழ்க்கையில் இத்தகைய நிகழ்ச்சிகள் பலவற்றை நாம் சந்திக்க நேரிடுகிறது.

கலாநிதி. சபா. ஜெயராசா அவர்கள் கூறியது போல் பெண்ணுதிக்கம் மேலோங்கியிருப்பதும் மறுக்கப்பட முடியாததாயிருக்கிறது. அதிக சீதனத்துடன் மனைவியாக வரும் பெண் தனது கணவனை தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் நிகழ்ச்சிகள் பல குடும்பங்களில் காணப்படக் கூடியதாகவே உள்ளது. அதுவும் கணவன் ஒரு ஏழையாக இருந்துவிட்டால் பெண்ணின் ஆதிக்கத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

பெண்கள் அதிக வேலை செய்தும் அதிக காலம் உயிர் வாழ்கிறார்கள் என்பதும் நடைமுறை உண்மையே.

சீதனப் பிரச்சினைக்கு தனியே ஆண்கள்தான் காரணமென்பது மறுக்கப்பட வேண்டிய தொன்று. சீதனத்தை கொடுப்பது பெண்ணைஇருக்கும் அதே வேளையில் அதை வாங்கும் ஆணின் தாயாக (மாமியாக) பெண்ணே அமைகிறாள். தனக்கு ஒரு நன்கு படித்த பெரிய உத்தியோகம் பார்க்கும் கணவன் வேண்டுமென்பதற்காக ஆண்களுக்கு அதிக விலைகொடுக்க எத்தனையோ பெண்கள் ஆயத்தமாக உள்ளனர். இத்தகைய நிலைமைகளிலேயே கணவன் மனைவிக்கிடையில் கருத்து வேறுபாடும், சண்டையும் ஏற்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் அத்தம்பதியினரில் பெண் தன் கணவனின் உத்தியோகத்துக்காகவும் கணவனுனவன் மனைவியின் பணத்துக்காகவும் மேற்கொண்ட திருமணவாழ்க்கையே ஆகும்.

பொதுவாக பெண்ணுதிக்கத்தை விட பெண்ணடிமைத்தனமே அதிகம் காணப்படுகிறது. இதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. இவற்றை ஆராயும் போதும் பெண்ணடிமைத்தனத்துக்கும் பெண்களே பெரும்பாலும் காரணமாக அமைகிறார்கள். அதாவது பல பெண்கள் தாம் அடிமைகளாக வாழ விருப்பப்படுகிறார்கள் என்றுகூட கூறலாம். சமுதாயத்தில் தன்னைப் பற்றிய தொரு நல்ல பெயரைத் தேடுவதற்காக விரும்பியோ விரும்பாமலோ பெண்ணுனவள் ஆண்களுக்கு அடங்கியவளாகவும் எதிர்த்துப் பேசாதவளாகவும் வாழத் தலைப்படுகிறாள். சமுதாயப் போக்கும் பெண்ணடிமைத்தனத்துக்கு வழிகோலுகின்றது.

கதைகள், சினிமாக்கள், மரபு முறைகள், பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் போன்றன யாவும் பெண்களை அடிமை மனப்பாங்குக்கு ஆளாக்குகின்றனஎன்பது உண்மை. திருவாளர் டொமினிக் ஜீவா அவர்கள் கூறிய கருத்து நியாயமானது. அவர் இதற்காக கொடுத்த உதாரணங்களுடன் மேலும் பல உதாரணங்கள் நம் அன்றுட வாழ்விலும் நடைமுறையிலும் காணப்படுகின்றன.

குறிப்பாக வாழ்விழந்த ஓர் இளம் விதவை தன் வாழ்நாள் முழுக்க இப்படியே காலங்கழிக்க வேண்டும் என்றும் சந்தர்ப்பவசத்தால் கற்பிழந்த பெண் குடும்ப வாழ்க்கைக்கு பொருத்தமற்றவளென்றும் காதலில் கைவிடப்பட்டவள் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாதென்கம் பல சினிமாக்களும், நுதைகளும் வலியுறுத்தி வருவது சமுதாயத்தில் இத்தகைய பிற்போக்கான சிந்தனைகளை தூண்டுவனவாக அமைகின்றன. சில திரைப்படங்களில் இளம் விதவைகளின் கதையை படமாக்கிவிட்டு, இறுதியில் "இவள் இனிமேல் திருமணம் செய்து கொள்ளமாட்டாள். ஏனென்றுல் இவள் ஒரு தமிழிச்சி" என்று கூறிவிடுவார்கள். இத்தகைய படங்கள் சமுதாயத்தில் எத்தகையமனப்பாங்கை வளர்க்கும் என்பது யாவரும் அறிந்தது. உதாரணம்: -"நான் பாடும் பாடல்" திரைப்படம்.

சில திரைப்படங்களும் கதைகளும் புதுமையான முறையில் முற்போக்கான கருத்துகளை முன்வைத்தாலும் பெண்ணடிமைத்தனத்தை இல்லாமற் செயவதற்கான தீர்வைச் சொல்லாமல் விடுவதால் அவற்றினுல் உண்மையான பயனைப் பெறமுடியாமலிருக்கிறதென்பதும் ஒரு குறையாகும்.

### சிந்தனைகள் மழுங்கடிப்பு

திருமதி பத்மா சோமகாந்தன் அவர்கள் கூறிய கருத்துகளில் சில முற்றாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவையல்ல. உதாரணமாக நமது பெண்கள் புதுமையாகச் சிந்திக்கவில்லை என்று கூறுவதை விட அவர்களது சிந்தனைகள் மழுங்கடிக்கப்படுகின்றன என்பதே உண்மை. இதற்கு பெற்றோர்களும் ஒரு விதத்தில் காரணமாகிறார்கள்.

அதிகமான பெற்றோர் தமது பெண்களுக்கு கல்வியறிவூட்டுவதை விட பருவம் வந்தவுடன் திருமணம் செய்து வைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். பண்டைய காலத்தில் பெண்கள் பருவமடைந்து விட்டால் அவர்களை ஒரு பெற்றோரும் பாடசாலைக்கோ அல்லது கல்வி நிலையங்களுக்கோ அனுப்புவதை நிறுத்தி விடுவார்கள். மற்றும் சில பெற்றோர் தம் பெண்களின் கவனத்தை சமையலிலும், தையல் வேலைகளிலும் திசைதிருப்பி விடுவார்கள். இதனுல் பெண்களுக்கு புதுமையாகச் சிந்திப்பதற்கு நேரமோ வழிவகைகளோ இல்லாமல் போகிறது

பெண்ணடிமைத்தனத்துக்கு ஆண்களின் மனப்போக்கும் ஒரு காரணமாக அமைகிறது ஒரு கணவன் வீட்டு வேலைகளில் மனைவிக்கு உதவுவது தன் சுயமரியாதைக்கு இழுக்கு என்று கூறுகிறுன் சில கணவன்மார்கள் தாம் வீட்டில் மனைவிக்கு உதவி செய்வது வெளியில் தெரிந்தால் தனக்கு அவமரியாதையென்று கருதுகிறார்கள்.

பொதுவான ஆண்களிடையே சில பிற்போக்கான கருத்துகள் நிலவி

(6 ஆம் பக்கம் பார்க்க)

-கு: குலதரன்-

சர்ச்சை சக்கரம்

நங்கை

# ஒரு ரசிகரின் கடிதம் பற்றி நளினி



தமிழ்த் திரையுலகுக்கு 'உயிருள்ள வரை உஷா' படத்தின் மூலம் அறிமுகமானவர் நளினி.

இன்று அவர் தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவர்.

அவர் தனது ரசிகர்களின் அறிவுரை பற்றிச் சொல்கிறுர்:

எனக்கு ரசிகர்களிடம் இருந்து நிறைய கடிதங்கள் வருகின்றன. அதில் ஒரு கடிதத்தை நினைத்து நான் இன்னமும் சிரித்துக் கொள்கிறேன்.

ஒரு ரசிகர் எனக்கு அடிக்கடி கடிதம் எழுதுவார். ஒரு கடிதத்தில் அவர், 'நீங்கள் எந்தப் படத்திலும் விதவையாக நடிக்காதீர்கள். அப்படி நடித்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன்' என்று எழுதினுர்.

இது மிரட்டலா அல்லது என் மீது அந்த ரசிகர் கொண்ட மிதமிஞ்சிய அன்பா என்று தெரியவில்லை.

சினிமா வேறு, வாழ்க்கை வேறு என்றிருந்தாலும், என்னை விதவைக் கோலத்தில் பார்த்தாலே துடித்தும் போகும் அந்த ரசிகரை நினைக்கும்போது வியப்பாகத்தான் இருக்கிறது.

ஒரு சில ரசிகர்கள் 'உங்களுக்குத் தெய்வீக முகம். எனவே தெய்வீகப் படங்களில் நடியுங்கள்' என்று எழுதுகிறுர்கள்' என்றுர்.

## திரை உலகில்

மலையாளத்தில் 33 படங்களுக்கு ஒளிப்பதிவாளராக இருந்தவர் கே பி. தயாளன். இவர் ஒரு தமிழர் - கர்ணனின் அண்ணன் மகன். 'பூக்களைப் பறிக்காதீர்கள்' இவர் ஒளிப்பதிவு செய்யும் முதல் தமிழ்ப்படம்.

★

இராம நாராயணன் மாறுபட்ட படைப்பாக உருவாக்கி வரும் படம் 'சோறு'.

★

நடிகை அமலா இப்பொழுது ஒரே 'பிஸி'. இப்போது அவர் கைவசம் இருக்கும் படங்களின் எண்ணிக்கை பத்து.

★

கவுண்டமணிக்குத் தமிழ்ப்பற்று அதிகம். 'தமிழும், தமிழர்களும் தாக்கப்பட்டால் உடல் பதறுகிறது' என்கிறுர்.

★

'விக்ரம்' படத்தை அடுத்து டைரக்டர்கள் பாரதி - வாசு இருவரில் வாசுவின் டைரக்ஷனில்

## தயாரிப்பு: பேரின்பம்

கமலஹாசன் ஒரு படத்தைத் தயாரிக்கப் போகிறுர் இதன் கதாநாயகன் சத்தியராஜ். இந்தப் படத்தில் கமல் நடிக்கப் போவதில்லையாம்.

★

பாரதிராஜாவிடம் அசோசியேட் டைரக்டராக பணிபுரிந்து வரும் சித்ரா லட்சுமணன் மோகன் - ரேவதியை வைத்து ஒரு படத்தை இயக்குகிறுர்.

## மோகனின் விருப்பு

ஸ்ரீதேவியுடன் ஒரு படத்திலாவது நடிக்க வேண்டும் என்று நடிகர் மோகனுக்கு விருப்பமாம்.

மோகன் இதுபற்றிக் கூறுகையில்,

சுஹாசினி முதல் நதியா வரை எத்தனையோ கதாநாயகிகளுடன் நடித்து விட்டேன், ஆனுலும் ஸ்ரீதேவியுடன் ஒரு படத்திலாவது நடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

## நடிகை சுமித்ராவின் 'ஒரு மனிதன் ஒரு மனைவி'

'ஒரு மனிதன்' ஒரு மனைவி' படத்தின் மூலம் படத் தயாரிப்பாளர் ஆகி இருப்பவர் நடிகை சுமித்ரா. அவர் சொந்தப் படத் தயாரிப்பில் இறங்கியது எப்படி?

அவரே சொல்கிறுர். "என் கையில் கொஞ்சம் பணம் இருந்தது. அதை வருமானம் தரக்கூடிய தொழில் அல்லது கட்டடங்களில் முதலீடு செய்ய விரும்பினேன்.

என்னைப் படவுலகுக்கு அறிமுகப்படுத்திய டைரக்டர் துரையின் ஆலோசனையுடன் 'ஒரு மனிதன், ஒரு மனைவி' படத் தயாரிப்பில் இறங்கினேன். சாப்பாட்டுக் கூடைக்காரியாக படத்தில் நடிக்கவும் செய்தேன்.

'பசி' படத்தில் குப்பம்மாள் கேரக்டர் எப்படி ஷோபாவுக்கு பெயர் பெற்றுத் தந்ததோ அது போல 'ஒரு மனிதன், ஒரு மனைவி' படத்தில் சாப்பாட்டுக் கூடைக்காரி (கண்ணம்மா) கேரக்டர் மூலம் எனக்குப் பெயர் கிடைக்கும் என்று நம்புகிறேன்'' என்றுர்.

## 'ஒரு இனிய உதயம்'

ஒ'ரு இனிய உதயம்' படத்தின் துவக்கவிழா விடியா கார்டனில் நடந்தது. அமைச்சர் திருநாவுக்கரசு துவக்கி வைத்தார்.

பாண்டு தயாரிக்கும் இப்படத்தை டி. ராஜேந்தரின் உதவியாளர் செல்வம் டைரக்ட் செய்கிறுர்.

விஜயகாந் - அமலா ஜோடியாக நடிக்கிறுர்கள்.

சிறந்த நடிகை தெரிவுக்குப் பின்

# தமிழ்ப் பட வாய்ப்பு குவிகிறது; ஆனல்ஏற்கத் தயாராக இல்லை

## பேட்டியில் சுஹாசினி சொன்னுர்

இந்தியாவின் சிறந்த நடிகையாக சுஹாசினி தெரிவு செய்யப்பட்டார் அல்லவா!

அதற்குப் பின்னர் பிரபல ஆங்கில சஞ்சிகையான 'புரொன்ட்லைன்' க்கு அவர் பேட்டி அளித்தார்.

அந்தப் பேட்டியின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.

கேள்வி: சிறந்த நடிகை தேசிய விருது 'சிந்து பைரவி' க்குக் கிடைக்கும் என்று எதிர் பார்த்தீர்களா?

பதில்: ஏதாவது விருது கிடைக்கும் என்று எதிர் பார்த்தேன். தேசிய விருது கிடைக்கும் என்று கனவிலும் எண்ணவில்லை

கே: 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' படத்துக்காக கிடைக்கவிருந்த விருதை கடைசி நிமிடத்தில் தவற விட்டீர்களே!

ப: அப்போது அந்த விருது கிடைத்து இருந்தால் அது நீதியானதாக இருந்திருக்காது அது எனது முதல் படம். நடிப்பில் அ, ஆ வே தெரியாத காலம் அது.

கே: 'சிந்து பைரவி' யில் நடிப்பது பற்றி முன்னர் நீங்கள் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

ப: ஆம். பாலசந்தருக்காக எந்தப் பாத்திரத்திலும் நடிக்க நான் தயார் ஆரம்பத்தில் நான் பயந்தேன்.

நீண்ட நாளைக்குப் பின்னர் தமிழ்ப்படம் ஒன்றில் நான் நடித்தேன் அதனுல் ரசிகர்கள் விரும்பும் பாத்திரம் ஒன்றில் நடிக்க நான் விரும்பினேன்



கே: 'சிந்து பைரவி' பாத்திரம் உங்கள் வாழ்க்கையுடன் இணைந்த மாதிரி இருந்ததா?

ப: 'சிந்து' வின் நிலையில் நான் என்றுமே இருக்கவில்லை

கே: தமிழ்த் திரைப்பட உலகில் என்ன பிழை நடந்துள்ளது?

ப: எனக்கே தெரி[illegible] [illegible] விக்கே இன்னும் பதில் [illegible] முடியாதுள்ளேன். மலையாளம், கன்னடம், தெலுங்குப்படவுலகில் நான் பெரிய அளவில் பிரபலம் பெற்றுள்ளேன்.

கே: 'சிந்து பைரவி'க் குப் பின்னர் தமிழ்ப்பட வாய்ப்புக்கள் நிறைய வந்துள்ளனவா?

ப: நிறைய வந்துள்ளன. ஒன்றையுமே நான் ஏற்கவில்லை. வஞ்சம் தீர்ப்பதற்காக இப்படிச் செய்யவில்லை. தெலுங்குப் படவுலகில் நான் 'பிஸி'யாக இருப்பதே இதற்குக் காரணம். 'சிந்து பைரவி' யில் கிடைத்த நல்ல பெயரை நான் பழுதாக்க விரும்பவில்லை. தமிழ்ப்படங்களில் நான் ஒழுங்காக நடிக்கப்போவது இல்லை.

வெள்ளித் திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை, இலக்கியப் புலங்களில் பழைமையும் புதுமையும்

கலை இலக்கியங்களிலே காலத்துக்குக் காலம் புதிய புதிய வடிவங்கள் தோன்றுதலுண்டு. புதுமைகள்மலர்வதற்குரிய இயங்கியலை நோக்காத விடத்து, அவை பற்றிய தெளிவான காட்சியை உள்வாங்க முடியாது.

பண்பாட்டுப் பழமையும் - பண்பாட்டுப் புதுமையும், மரபும் - மரபு மீறலும், பழைய உள்ளடக்கமும் - புதிய உள்ளடக்கமும், - பழைய வடிவமும் - புதிய வடிவமும் என்றவாறு முரண்பாடு தோன்றுதல் இயங்கியலில் என்றுமுள்ள விதியாக விளங்குகின்றது.

எதிர் எதிர் நிலைகளுக்கிடையே ஒற்றுமையும் போராட்டமும் இயக்கப் போக்குகள் அனைத்திலும் உருவும் ஒளியுமாக நிறைந்துள்ளன. கலை இயக்கங்களிற் பழைமை இருப்பது என்பதே புதுமை இருப்பதற்கான தவிர்க்க முடியாத நிபந்தனையாகும். சமூக இயக்கப் போக்கிலே காணப்படும் முரண்பாடுகள் கலை இலக்கியங்களிலே நேரடியாகத் தெறித்துப்பரவுகின்றன.

முரண்பாடுகள் மாற்றங்களை மலர்விப்பதற்கான உள்ளடக்கமாகவும் உந்துவிசையாகவுமுள்ளன. முரண்பாடுகள் என்ற உந்து விசைகள் பண்பு சார்ந்த மாற்றங்களை வருவிக்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் ''அளவு மாற்றம்'' ''பண்பு மாற்றம்'' ஆகிய தொடர் செயல்முறைகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளை நோக்க வேண்டியுள்ளது. அளவு மாற்றம் என்பது வடிவு மாற்றத்தைக் குறிப்பிடும் அதாவது, வடிவத்தில் ஏற்படும் பெருக்கமும், சுருக்கமும் அளவுமாற்றத்தைக் குறிப்பிடும் அளவு மாற்றம் ஒரு கட்டத்திலே பண்புமாற்றமாக உருவெடுக்கும். உதாரணமாக, வெப்பத்தின் அளவை அதிகரித்துச் செல்ல அதன் தாக்கத்துக்குள்ளாகும் ஒரு பொருள் தன் பண்பிலிருந்து மாறிச் செல்வதை இயற்கை விஞ்ஞானத்திலே காணமுடியும்.

இந்த விதி சமூக விஞ்ஞானத்துக்கும் பொருந்தும்; கலை இலக்கியங்களுக்கும் பொருந்தும். இடைவிடாது செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு கலைஞனது அளவின் ஆக்கப் பெருக்கம், அவனது கலையாக்கப் பண்பிலும் மாற்றங்களை வருவிக்கும்.

பின்னுப்பின்னப்படுத்தவும் முயற்சிக்கும்.

**எதிர்நிலை உறவும் சமநிலையும்**

கலை இலக்கியங்களிலே எதிர் எதிர்ப் புருவங்களுக்கு இடையிலான உறவு சமமாகக்காணப்படுமாயின் அவ்வாறான சமநிலை இயல்பே நிரந்தர மற்ற செயற்பாட்டைப் பிறப்பித்த வண்ணமிருக்கும். இதற்குக் காரணம் ஒற்றுமையை மிஞ்சிய போராட்டமாகும்.

யாகிவிடும்.

அதாவது ஒரு குறிப்பிட்ட மாற்றம் எவ்வாறு தொழிற்படும் என்று கூற முயற்சித்தல் வெறும் வார்ப்பு நிலைச் சூத்திர அடைவாக மாறிவிடும். அதற்குப் பதிலாக ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அறிந்து கொள்வதன் வாயிலாக மாற்றத்தைக் கண்டு பிடித்தலே சிறந்த தெளிந்த நடவடிக்கையாகின்றது.

கலை இலக்கியங்களிலே

## முற்போக்கான பழைமைகள் புதுமைக்குள் கலக்கின்றன

**பண்புமாற்றமும் அளவுமாற்றமும்**

விரும்பத்தக்க பண்பு மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முதற்படியாக அளவு மாற்றங்களை எவ்வாறு கையாள வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இவற்றைத் தெளிவாகவும், துல்லியமாகவும் விளங்கிக் கொள்ள பொருள்களிலும், நிகழ்வுகளிலும், காணப்படும் முரண்பாடுகளைக் கண்டறிதல் முதற்கண் முனைப்புப் பெறுகின்றது.

அனைத்துப் பொருள்களிலும் முரண்பாடு காணப்படல் வாழ்நிலை அனுபவங்களிலிருந்து பெறப்படும் சாதாரண வெளிப்பாடாகும். உண்மையான முரண்பாடு என்பது எதிர் எதிர் நிலைகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமையென ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவர். எதிர் எதிர்ப் புருவங்களுக்கிடையிலான ஒற்றுமையே அவற்றுக்கிடையிலான போராட்டங்களையும் பிறப்பித்த வண்ணமுள்ளது.

ஓர் எதிர்நிலை இன்னோர் எதிர் நிலையைத் தாக்கவும் மாற்றவும்

எதிர் மறைகளுக்கிடையேயுள்ள ஒற்றுமை வெகு தற்காலிகமானது. ஆனால் போராட்டம் சிரஞ்சீவியானது.

எதிர் மறைகளுக்கிடையிலான உறவுகளிலே மாற்றங்கள் மலர்தல் பண்பில் ஏற்படும் மாற்றங்களாகக் கொள்ளப்படும் பழைய உறவுகள் கலைதலும், புதிய உறவுகள் மலர்தலும் பண்பு மாற்றங்களால் அறியப்படும் இந்நிலையிற் கலை இலக்கியங்களிலே பழை

நாம் காணும் மாற்றங்கள் முன்னேற்றம் வாய்ந்தவை என்று கருதப்பட வேண்டுமாயின் அவை ஒரு வளர்ச்சிக் கட்டத்திலிருந்து இன்னொரு வளர்ச்சிக் கட்டத்தைச் சென்றடைவதாக இருத்தல் வேண்டும். இதனை வேறுவிதமாகக் கூறுவதானால் நிலை மறுப்பின் வாயிலாகவே வளர்ச்சியின் வாயில் திறக்கப்படுகின்றது எனலாம்.

பழைமையை வென்றெடுப்பதற்கான புதுமை

**-கலாநிதி சபா ஜெயராசா**

மைகள் அழிதலும் புதுமைகள் தோன்றுதலும் செயற்பட்ட வண்ணமிருக்கும். பழைய பழைமை புதிய பழைமையாகும். பழைய புதுமை புதிய புதுமையாகும்.

இந்நிலையிற் புதிதாகப் பிறப்பெடுத்த பழைமைக்கும், புதுமைக்குமிடையே ஒற்றுமையும் காணப்படும். நிரந்தர முரண்பாடும் காணப்படும். ஆனால் இவற்றை ஒரு பொதுவான வார்ப்பு வடிவமாக வைத்து எந்த நிலையிலும் பிரயோகிக்கக் கூடிய ஒரு சூத்திரமாக மாற்றி விடுதல் வெறும் பொறிமுறைக் கற்பனை

தோன்றுவதற்கான சூழல்வந்ததும் பழைமை பகல் வெய்யிலின் பனித்துளியாய்க் கரையும். இந்நிலையிற் பழைமையிலுள்ள முற்போக்கான பண்புகள் புதுமைக்குள்ளே இயல்பாகக் கலந்து கொள்கின்றன.

கலை இலக்கியங்களிற் புதுமைகள் பழமைக்குள்ளே கருக்கொண்டு தோன்றி, வளர்ந்து மலர்வதை மனங் கொள்ள வேண்டியுள்ளது. புதுக் கவிதையாளர், புத்தாக்கம் செய்வோர், மரபை மீறுவோர், இவற்றைக் கருத்திலே கொள்ள வேண்டியுள்ளது.

# பதினேழு நாடுகளைச் சேர்ந்த யுவர்கள், யுவதிகள் தங்கி

## சிரமதானம் புரிந்ததை மறக்க முடியாது

சமுதாயத்தில் மகளிர் சமத்துவமாக, சுதந்திரமாக வாழ வழி வகுப்பதாயின் அவர்தம் கல்வி வளர்ச்சியை உறுதி செய்து, கைத்தொழிற் பயிற்சி வழங்கி சுயதொழில் வாய்ப்பு வழங்கவேண்டும். இதுவே பெண்நிலைவாத ஆக்கப்பணியாக அமைய முடியும்.

தனதுஅறுபத்தாறுவது வயதிலும் மகளிர் நலப் பணிகளில் ஈடுபட்டு வரும் திருமதி. வேதவல்லி கந்தையா சஞ்சிவிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினர்.

உதவி ஆசிரியராகத் தொழிலை ஆரம்பித்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆரம்ப பிரிவு தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வுபெற்ற அவர் உள்ளூரிலும், தேசிய ரீதியிலும், சர்வ தேச ரீதியிலும் வகித்த பதவிகள் பல.

யாழ்மாவட்ட கடன் வழங்கும் சங்கங்களின் சமாஜம், யாழ் மாவட்ட கூட்டுறவு மகளிர் குழு ஆகியவற்றின் தலைவியாகவும், தேசிய கூட்டுறவு மகளிர் குழுவின் உப-தலைவியாகவும், இலங்கை இந்து சமய ஆலோசனைச் சபை உறுப்பினராகவும், தேசிய மாதர் முன்னணி உப-தலைவியாகவும், சர்வ தேச கூட்டுறவு மகளிர் குழுவின் செயலவை உறுப்பினராகவும் பதவிகளை வகித்த அவர் சஞ்சிவி வாசகர்களுக்காகத் தமது நினைவலைகளை வழங்குகிறார்.

கூட்டுறவு மகளிர் குழுக்கள் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட பின்னர் கூட்டுறவுத் துறையில் மகளிர் பங்கு அதிகரித்துள்ளதுடன், மகளிர்நலனும் பெருகி உள்ளது.

ஐ. நா. சபை 76-86

**திருமதி வேதவல்லி பேட்டி**

ஆண்டுகாலப் பகுதியை மகளிர் காலமாகப் பிரகடனஞ் செய்ததைத் தொடர்ந்து 1979 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு மகளிர் குழுக்கள் 27 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரிவுகளில் அமைக்கப்பட்டன. மாவட்ட குழுவின் முதலாவது தலைவியாக என்னைத் தெரிவு செய்தார்கள்.

மகளிருக்குக் கைத்தொழில் அறிவை ஊட்டுதல், அவர்களுக்குச் சுயதொழிற்பயிற்சி வழங்குதல், அவர்களைச் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடச்செய்தல், அவர்களின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் வசதிகளை உருவாக்குதல், அவர்களின் உற்பத்திகளின் கண்காட்சிகளை காலத்துக்குக்காலம் நடத்துதல் - இவ்வாறுன

பிரச்சினைக்கு அவர்கள் கண்டுள்ள தீர்வு என்னைக் கவர்ந்தது. (Community Kitchen)- என்ற கூட்டு



திருமதி
வேதவல்லி கந்தையா

சமையல் நிலையங்களில் பெண்கள் தமது குடும்பத்துக்கு வேண்டிய உணவுப் பொட்டலங்

**பேட்டி: வே. வரதசுந்தரம்**

வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்துச் செயற்பட்டோம்.

**சோவியத் நாட்டு முன்மாதிரி**

வெளியே வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும், ஏனையோருக்கும் சமையல், குழந்தை பராமரிப்பு ஆகிய வேலைப் பளு அதிகம் என்று நமது சமூகத்தில் கருத்துநிலை இருக்கிறது.

நான் 1978 இல் சோவியத் நாட்டுக்குச் சென்றிருந்தபோது இப்

களை எடுத்துச் செல்லலாம். குழந்தைகளை பாலர் பாடசாலைகளிலும், பாடசாலை முடிந்து

தாம் விடு திரும்பும் வரை வேறு குழந்தை பராமரிப்பு நிலையங்களிலும் பேணுவர். மாஸ்கோ நகரில்

உள்ள 'பயனியர் பலஸ்' என்ற கல்வி நிறுவனம் என்னை மிகவும் கவர்ந்தது. 5 வயது முதல் 28 வயது வரை இருபாலரும், தமிழ் உட்பட 14 உலக மொழிகளைப் பயிலவும், பல்வேறு பயிற்சி நெறிகளைத் தொடரவும் அங்கு வாய்ப்புண்டு.

**டென்மார்க் அனுபவம்**

1980 இல் ஹங்கேரி, டென்மார்க், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு மூன்று மாதக் கல்விச் சுற்றுலா மேற்கொண்டேன். டென்மார்க் தேசத்தில் கூட்டுறவுத்துறை சிறப்பதா வளர்ந்துள்ளது. அந்த நாட்டின் ஏற்றுமதி இறக்குமதித் துறையில் எண்பது சதவிதம் கூட்டுறவு இயக்கத்தின் பொறுப்பில் உள்ளது. இதற்குக் காரணம் அங்கு கூட்டுறவுத் துறையில் அரசின் தலையீடு இல்லை. நமது நாட்டில் அரசாங்கத்தின் அனுவசியத் தலையீடு காரணமாக கூட்டுறவுத் துறையின் சுதந்திரம் பறிபோவதுடன், மக்கள் பங்களிப்பும் பாதிப்படைகிறது.

**நினைவலை**

**சிரமதானம்**

நீர்வேலி மாதர் சங்கத் தலைவியாக இருந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

ஒருவர் மனோபாவம் மற்றவருக்குத் தெரியாமலே ஓர் அந்தரங்கமான பயங்கர மௌனத்தில் இருவரும் அமிழ்ந்திப் போயிருந்தனர்.

'தொரே, அப்போ நான் வரட்டுங்களா?'

'அ...சரி, ஆனு ஒரு வெசயம்...?'

துரையின் பீடிகை கிழவனுக்குத் துப்பரவாக விளங்கிவிட்டது.

அப்ப, என்ன சொல் 'நீங்க ? தொரைக்கு மனசிலே அப்புடி ஒரு விருப்பம் இருக்கும்னு, வாயத் திறந்து ஒரு வாக்கு நறுவிசாச் சொல்லுங்க... நாலு பேருக்கும் தெரியாமல் கருமத்தை அப்பிடியே ஒழுங்கு பண்ணித் தந்துடறேன். அதுக்கு இப்ப என்ன சொல்றீங்க...?'

கிழவன் தனது மனோநிலையைப் பச்சையாகத் தெரிந்து கொண்டான் என்று இவனுக்குத் தெரிந்தபோது இவனிடம் இருந்த கொஞ்ச நஞ்ச கூச்சமும் பறந்து விட்டது.

அடைப்புத் திறக்கும் வரைதான் வெள்ளம் கட்டி நிற்கும். அது எடுபட்டால் ஓட்டம்தான் - ஓட்டமேதான்.

அவனிடமிருந்து கூச்சம், நாணம், கௌரவம் என்கிற கவசங்களை, 'லோகாயுதம்' என்ற மூல விக்கிரகம் ஒரு நொடியில் அடித்துத் துரத்தி விட்டது.

மேனியில் அப்பவே ஏதோ ஒருவித சுரீரிப்பு.

'சரி தாத்தா, நீங்க போங்க... நான் மைம்மல்பட வர்றேன்'

'ஆமா, எடம் வலம் தெரியுங்களா?'

'ஓ... அதைக் கேக்க மறந்துட்டேனே... எப்படி வர்றது?'

'கட்டாயம் வருவீங்களா?'

'ஏன் அப்படிக் கேக்கிறீங்க?'

அழைச்சிக்கிட்டுப் போறேன். எங்க தங்கிக்கனுமோ அங்க தங்கிக்லாம்.... சரிதானுங்களே...?'

'சரி, றையிட்'

'ஆமா, ரேட்' என்ன தெரியுங்களா?'

'அதென்ன ரேட்... அப்புடியென்றுல்...?

மனசுதான் சம்மதிச்சுட்டுதே. 'ரேட்' கூடத் தெரியாதா?' என்று கேட்ட கிழவன், சிரித்த

யென்னு பத்து, அதுக்கு மேலயென்னு ஒரு அஞ்சு ஆறுக்குள்ள முடிச்சுடலாம்'

'அப்படியா...?'

துணிந்தவனுக்குத் துக்கம் இல்லை. சறுக்கி விழுந்தாயிற்று. சேற்றைக் கழுவினாலும் குளிர் குளிர்தான். இனி என்ன, கௌரவமாகக் குளத்தில் மூழ்க வேண்டியதுதான்.

அறநனைந்தவனுக்குக் கூதல் என்ன கொடுகடி




'அப்புறம் ஏமாத்திடக் கூடாது?'

'இல்லை இல்லை... கட்டாயம் வருவேன்'

'அப்புடீன்னு, சரியா

படி இரு கன்னங்களையும் ஒரு தடவை பரக்க விழித்துப் பார்த்தபின், 'ரேட் எல்லாம்... அது பாருங்க 'சைஸ்' ஸைப் பொறுத்தது.

வெகு சாதாரணமாக-மாமூல் பிரகாரம் பேரம் பேசுவது போல் சொன்னான்.

'சரி, எவ்வளவு வரும்?'

'அது வந்து 'சைஸ் ஸை'ப் பொறுத்தது' ன்னு முன்னமே சொன்னேனில்லையா?'

'அதென்னப்பா 'சைஸ்'?'

'தெரியாதுங்களா... கொஞ்சம் இளங்...

என்ன?

துரை இனி 'றடி' - ஆள், அந்தரகாறனுனர்.

'சரி, வாறன்'

'அப்ப, மொதல்ல கைச்செலவுக்கு ஏதும் பாத்துக் குடுங்களேன்'

'எவ்வளவு கேக்கிறே?'

'ஒரு அஞ்சு ரூவா'

சொக்கை கும்மச் சிரித்த கிழவன், இவன் கொடுத்த காசைப் பவ்வியமாக இரு கரமும் நீட்டி வாங்கி இடுப்பு வார்ச் செப்புக்குள் செருகிக் கொண்டான்.

கிழவன் மறையும் வரை 'துரை' அந்த இடம் நகராமல் நின்று அப்படியே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

* * *

பரவும் மாலை வேளை.

பொழுது உறைந்து கொண்டு போகிறது.

கிழவன் குறிப்பிட்டுச் சொன்ன மூன்றும் மலைச் சாரலில் ஏறி நின்று, அந்த வாகை மரத்தடியில் அவன் வெகுநேரம் வரை சுற்றும் முற்றும் பார்த்தான்.

மைம்மல்பட்டு விட்டது.

கிழவன் வருவதற்கான ஒரு அசுமாற்றத்தையும் காணவில்லை.

இவன் நெஞ்சில் லேசாகப் பயம் தட்டியது. தன்னந்தனிமையிலே இது போன்ற பழக்க தோஷமில்லாதபடியால் ஏகாந்தமான மலைப்பிரதேசத்திலே கொஞ்சங் கூட அவனால் திடனாக நிற்க முடியவில்லை.

'கிழவன் ஆசை மூட்டி அலைக்கழித்து விட்டானோ?'

புதிய பிரச்சினை ஒன்று அப்போது மனசில் உருவெடுத்தது. 'விடுதியிலுள்ள நமது காடேறிப் பயல்கள் யாராவது இந்த வேளையாகப் பார்த்து இதே பக்கம் வந்தால்...?'

இந்தச் சிந்தனை துளிர் விட்டபோதே நெஞ்சு சுமாரிட்டுக் கொண்டது. நன்னி அடிக்கிற மாதிரி மேனியடங்கச் சாடையாக நடுக்கம் எடுத்தது.

இந்த நடுக்கம் பனி அம்முகிற குளிரால் அடிக்கிறதா, பிரமித்துப் போய் நிற்கிற திடுக்காட்டத்தால் அடிக்கிறதா என்று சொல்கிறமாதிரியும் இல்லை.

இந்த இழவு சனியனின் கூத்துக்குள் கோமாளியாக, சற்றுத் தொலைதூரத்து லயங்களிலிருந்து காதுகள் ...

**(அத்தியாயம் - 06)**

துரை எதற்கும் ஆயத்தம்-துணிந்தே விட்டார். 'நாலு பேருக்கும் தெரியாமல் கருமத்தை ஒழுங்கு பண்ணித் தந்துடறேன்' என்ற கிழவன் கவசம் வேறு அவனுக்குக் கிடைத்து விட்டது.

எனவே, துரை எதற்கும் துணிந்தேவிட்டார்.

பொழுது மலைக்குள்ள போவிற நேரமாப் பாத்து, அந்த மலையடி வாரப் பக்கமா நேரே வாற மூணுவது, மலை உச்சியில வந்து, அங்கிட்டு நிக்கிற வாகை மரத்தோட நில்லுங்க. நான் அப்புறம் அங்கே வந்து அந்த எடங்களுக்கு

**(இருமாதக்குறுநாவல்)**

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

**ஆரம்ப ஆண்டுகளில் சீன சரித்திரம்**

ஜனவரி 16, 1931

வெளியிலிருந்து கலக்கத்தையும் துக்கத்தையும் உண்டு பண்ணும் செய்தி கிடைத்திருக்கிறது. ஆயினும் அதைக் கேட்டு பெருமையும் சந்தோஷமும் ஏற்படுகிறது. ஷோலாப்பூர் ஜனங்களுக்கு நேரிட்ட கதியைப் பற்றிக் கேள்விப்பட்டோம். இந்தத் துக்கச் செய்தி பரவியதும் தேசம் முழுவதும் என்ன நடந்தது என்பதும் சிறிது தெரிய வந்தது.

நமது இளைஞர்கள் தங்கள் உயிரைக் கொடுக்கிறார்கள்; ஆண்களும் பெண்களும் ஆயிரக்கணக்கில் மூர்க்கத்தனமான தடியடியை எதிர்த்து நிற்கிறார்கள். இந்தச் சமயத்தில் இங்கே சும்மா உட்கார்ந்து இருப்பது எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. ஆயினும் இது நமக்கு ஒரு நல்ல பயிற்சி என்று எண்ணுகிறேன். நம்மில் ஒவ்வொருவருக்கும் தம்மைப் பரிபூரணமாகச் சோதித்து அறிந்து கொள்ளக்கூடிய காலம் வருமென்று நினைக்கிறேன்.

இதற்கிடையில் நமது ஜனங்கள் கஷ்டங்களை அனுபவிக்க எவ்வாறு அஞ்சாது செல்கிறார்கள் என்பதையும் பகைவனின் ஒவ்வொரு புதிய ஆயுதமும் அடியும் எவ்வாறு அவர்களுடைய தீரத்தையும் உறுதியையும் அதிகமாக்குகின்றன என்பதையும் அறிந்து கொள்வது பெரிய ஆறுதலாயிருக்கிறது.

நிகழ்காலத்துச் செய்திகள் மனதில் நிறைந்திருக்கும்போது மற்ற விஷயங்களைப்பற்றிச் சிந்திப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆனால் வெறுமனே பகற்கனவு கண்டுகொண்டிருப்பதில் யாதொரு பலனும் இல்லை.

நாம் உருவான வேலை செய்ய வேண்டுமாயின் மனத்தை அடக்க வேண்டும். ஆகவே நாம் சிறிது நேரம் கஷ்டங்களை மறந்து ஆதிகாலங்களுக்குத் திரும்பிச் செல்வோமாக.

புராதன சரித்திரத்தில் இந்திய மாதாவுக்குச் சகோதரியாக விளங்கும் சீன மாதாவை எடுத்துக் கொள்வோம். சீனவிலும் கிழக்கு ஆசியாவிலும் ஜப்பான், கொரியா, இந்தோ-சீனு, சையாம், (தாய்லாந்து) பர்மா ஆகிய நாடுகளிலும் வாழ்பவர்கள் ஆரியர்கள் அல்ல - அவர்கள் மங்கோலிய வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்பு

களில் சொல்லியதுபோல் நாட்டாண்மைக்காரர்கள் என்றே சொல்ல வேண்டும். அறுநூறு அல்லது எழுநூறு வருடங்களுக்குப் பிறகு-

அதாவது இற்றைக்கு 4000 வருடங்களுக்கு முன் யோ என்னும் பெயருடைய ஒருவன் தன்னைச் சக்கரவர்த்தி என்று சொல்லிக் கொண்டதாக அறிகிறோம். இந்தப் பட்டம் இருந்தாலும் அவனைச் சக்கரவர்த்தி என்று சொல்வதைவிட நாட்டாண்மைக்காரன் என்று கூறுவதே பொருத்தமாய் இருக்கும்.

எகிப்திலும் மெச

## நேருவிடமிருந்து இந்திராவுக்கு

மேற்கே இருந்து சிலர் சீனு மீது படையெடுத்து வந்தார்கள். படையெடுத்து வந்தவர்கள் மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்களே.

அவர்கள் நாகரிகத்தில் சிறந்தவர்கள். உழவுத் தொழிலை அறிந்திருந்த அவர்கள் மந்தை மந்தையாக ஆடு, மாடுகள் வைத்து வளர்த்து வந்தார்கள். அவர்கள் நல்ல வீடுகள் கட்டி அவற்றில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய சமூகம் நல்ல வளர்ச்சி அடைந்திருந்தது.

அவர்கள் மஞ்சல் நதி என்று அழைக்கப்படும் ஹோயாங் - ஹோவுக் கருகில் குடியேறித் தங்கள் ராஜ்யத்தை அமைத்தார்கள். பல நூற்றாண்டுகளாகச் சீனு முழுவதும் பரவி, கலையிலும் கைத்தொழிலிலும் அபிவிருத்தியடைந்து வந்தார்கள்.

சீனமக்கள் பெரும்பாலும் குடியானவர்கள். அவர்களுடைய தலைவர்களை நான் முன்கடிதங்

பொடேமியாவிலும் நாம் பார்த்த சக்கரவர்த்திகள் மாதிரி அல்ல இவன். சீன மக்கள் உழவையே மேற்கொண்டிருந்தார்கள். அந்நாளில் மத்திய அரசாங்கம் என்பது அவ்வளவாக உருப்பெறவில்லை.

இந்நாட்டாண்மைக்காரர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததையும் பிறகு பரம்பரையை ஒட்டி வந்ததையும் நான் உனக்குச் சொல்லி இருக்கிறேன். சீனவிலும் இம் மாதிரி நடைபெறுவதைக் காண்கிறோம்.

யோவுக்குப்பின் அவன் மகன் பட்டத்துக்கு வரவில்லை. ஆனால் அவன் தனக்குப்பின் யாவரினும் திறமைசாலி என்று கருதப்பட்ட ஒருவனை நியமித்தான்.

சீக்கிரமே இப்பதவி பரம்பரை பாத்தியதையாக மாறிவிட்டது. 400 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஹிசையா வம்சம் சீனவை ஆண்டு வந்தது. இந்த வம்சத்தில் கடைசி

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லினத் தென்னைகளைத் தெரிந்து பயிரிடும் உரிய வழிமுறைகள்

க. திருத்தணிகாசலம்
(உதவிப் பிராந்திய முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, கிளிநொச்சி.)

தென்னை பிறபயிர்களைவிட மனிதரைப் போன்றே நீண்ட ஆயுட்காலத்தையுடைய ஒரு சிறந்த விருட்சமாகும். ஒழுங்கான முறையில் இப்பயிரை உண்டாக்கிப் போற்றி வளர்த்தால், எப்போதும் தன்னைநட்டவரை க்கைவிடாது தக்க பயனை எழுபது எண்பது வருடங்களுக்கு தொடர்ந்து கொடுத்துவரும். இதையே ஔவையும் "தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்' என்றார். இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியில் கணிசமான அளவை ஈட்டித்தருவது இப்பயிராகும். குழந்தையை வளர்ப்பது போன்றே தென்னையையும் சிரத்தையுடன் நட்டு வளர்க்க வேண்டும் என்பதாலேயே தென்னம்பிள்ளையென அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் தமக்குத் தேவையான தென்னைகளை உண்டாக்குவது பொருளாதார ரீதியில் ஒருசிறந்த கருமமாகும். இதையே பாரதியாரும் 'பத்துப் பன்னிரண்டு தென்னைமரம் பக்கத்திலே வேணும்' எனப் பாடினார்.

இப்படியான சிறப்பம்சங்களைக்கொண்ட தென்னையை சரியான முறையில் பயிரிடுவதற்காக சில நல்ல அடிப்படைகளைக்கொண்ட விவசாய வழிமுறைகள் உள்ளன. விரைவில் பயன்பெறவும் கூடிய தேங்காய்களை உற்பத்தியாக்கவும் நல்லின தென்னை நாற்றுக்களை உண்டாக்கித் தெரிவு செய்து நடுவது மிக முக்கியமாகும். இப்பயிரின் எல்லாப்பாகங்களும் மனிதருக்கு மிக உபயோகமானதால் ஒரு தென்னையை தேங்காய்க்காக மட்டும் உண்டாக்குவதை நோக்கமாகக் கொள்ளக்கூடாது. நமது பிரதேசம் தெங்கு அபிவிருத்தியில் தன்னிறைவு பெறவேண்டுமாயின் சிறப்பான தென்னைநாற்றுக்களை உற்பத்தி செய்வது பிரதானமானது.

வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் அலம்பில், கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள தென்னைநாற்று மேடைகளில் இருந்து ஒவ்வொரு வருடமும் ஒன்றரை லட்சம் சிறந்தரக தென்னை நாற்றுக்கள், மானிய விலையில் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையால் இம்மாகாண விவசாயிகட்கு வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த நாற்று மேடைகளுக்குச் சொந்தமான சகல பொருள்களும் கொள்ளையிடப்பட்டதால் தற்போது இவை இயங்க முடியாது மூடப்பட்டுள்ளன. அத்துடன் யாழ். மாவட்ட விவசாயிகளின் தேவைக்கென அச்சுவேலியில் அமைக்கப்பட்ட விசாலமான தென்னை நாற்றுமேடையும் மேற்கூறிய காரணங்களால் இயங்கமுடியாதுள்ளது. இதனால் நல்லரக தென்னம்பிள்ளைகளைத் தொடர்ந்து பெற முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இக்காரணங்களால் விவசாயிகள் தமக்குத் தேவையான தென்னம்பிள்ளைகளைத் தாமே உற்பத்தி செய்யக்கூடியதாக சில சிறந்த வழிமுறைகளை அறிந்துகொள்வது முக்கியமல்லவா.

இப்பிரதேசத்தில் தென்னை நாற்றுக்களை நட உகந்தகாலம் பெரும்போகத்தின் -மாரிகாலம் -ஆரம்ப காலமாகும். ஆனால் நீர்ப்பாசன வசதி கிடைக்கக்கூடிய காணிகளில் வசதிக்கேற்ப நடலாம். எனவே சுமார் எட்டு ஒன்பது மாதங்களுக்கு முன்பாக நாற்றுமேடைகள் போடப்படவேண்டும். நாற்றுப்போடதைமாதம் தொடக்கம் சித்திரை மாதம் வரையான காலம் சிறந்ததாகும். சிறந்த இன நாற்றுக்களைப்பெற நல்லரக விதைத் தேங்காய்களை தெரிவு செய்வது மிக இன்றியமையாததாகும். விதைத் தேங்காய்களைப் பெறுவதற்கான தாய்மரங்களைத் தெரிவு செய்வதிலும், அவற்றில் இருந்து தேங்காய்களை பறித்து உரிய முறையில் நாற்றுப் போடுவதும் இச்செய்முறையில் விவசாயி அறிந்திருக்கவேண்டிய பிரதான அம்சமாகும்.

### நாற்றுத் தேங்காய்

இருபது இருபத்தைத்து வயதுக்கு மேற்பட்டதும், திடகாத்திரமானதும் செழிப்பானதும், தேங்காயின் சகல பருவத்தை யுடைய குலைகளை ஒரே சிராக எல்லாப்பக்கங்களிலும் கொண்டதும்' வருடமொன்றுக்கு ஆகக் குறைந்தது அறுபது தேங்காய்களையாவது விளைவாகத் தரக்கூடியதுமான தென்னைகளைத் தெரிவுசெய்வதே தாய் தாவரத் தெரிவு (தென்னை) எனப்படும். இப்படியான தென்னைகளில் இருந்து முற்றிய தேங்காய்களைப் பறித்த பின், நடுத்தரப் பருமனை தேங்காய்களைத் தெரிவுசெய்து நாற்றுப் போடப் பாவிக்கலாம். இதுவே விதைத்தேங்காயாகும். எனினும் கால்நடைப் பட்டிகளுக்கும், கிணற்றுக்கும், நீர்நிலைகளுக்கும் அருகில் உள்ள தென்னைகளைத் தாய்த்தாவரமாகத் தெரிவு செய்தல் கூடாது. இவற்றில் இருந்து பெறப்படும் விதைத்தேங்காய்களுக்குரிய நாற்றுக்கள் எதிர்பார்த்த பிரயோசனத்தை தரமாட்டா தென்பதே முக்கிய காரணமாகும்.

## நாற்றுத் தேங்காய்களை பாட்டிலே போட்டே முளைக்க விடவேண்டும்

தேங்காய்களைப் பிடுங்கிய உடனேயே நாற்றுப் போடுவது மிக நல்ல தென சமீபத்தில் தென்னை ஆராய்ச்சித் தாபனமானது விதந்துரைத்துள்ளது. விதைத் தேங்காய்களை சேமித்து வைக்கவோ, வாடவிடவோ வேண்டியதில்லையெனக் கண்டறிந்துள்ளனர்.

நாற்றுமேடைகளை அமைப்பதற்குரிய இடத்தைப்பண்படுத்திய பின் தேங்காய்களை வரிசையாக இயற்கையில் தேங்காய் எப்படி விழுந்து பாட்டத்திற் கிடக்குமோ அதேமாதிரியாக சால்களில் ஒன்றன்பின் ஒன்றாக வைத்து மண்ணால் மூடிவிடவேண்டும். சால்களில் வைக்கும்போது தேங்காயின் அகன்ற பக்கம் மண்ணில் படக்கூடியதாக வைக்கவேண்டும். இதனால் கூடியபரப்பு மண்ணிற் படுவதால் கூடிய வேர் வளர்ச்சியுண்டாகும். ஒரு தென்னை நாற்று மேடையின் அளவானது ஐந்து தேங்காய் நிரைகளின் அகலத்தையும், வசதிக்கேற்ப நீளத்தையும் கொண்டிருக்கலாம். தேங்காய்களை நிமிர்த்தி நாற்றுப்போடுவது தவிர்க்கப்படவேண்டும். அத்துடன் விதைத்தேங்காய்களை கிணற்றுள் ஊறப்போடுவதும் தீமையானதே. முளையம் அழுக வாய்ப்பேற்படுவதே காரணமாகும். ஒவ்வொரு மேடைக்கிடையிலும் வடிகால்கள் இருத்தல் அவசியம். அத்துடன் மேடைகள் ஓலைகளாலோ, வைக்கோலாலோ மூடப்பட்டு தேவையானபோது நீர் ஊற்றவேண்டும்.

நாற்றுப்போட்டு நான்கு ஐந்து மாதங்களில் தேங்காய்கள் முளைக்கும். ஐந்துமாதத்தின் பின் முளைக்காதவற்றை மேடையில் இருந்து அகற்றி கொப்பறுக்காகப் பாவிக்கலாம். விரைவாக முளைக்கும்நாற்றுக்களே விரைவாயும், செழிப்பாயும் வளர்ந்து சிக்கிரம் பலன் தரவல்லவை. நாற்றுக்கள் மூன்று நான்கு இலைப் பருவத்தையடைந்த பின் அதாவது நாற்றுப்போட்டு ஏழு எட்டு மாதங்களின்பின், திடகாத்திரமான, செழிப்பான வீரியமுள்ள நாற்றுக்களை மட்டும் தெரிந்து பிடுங்கி நடுகைக்கு உபயோகிக்கவேண்டும்.

### நடுகைமுறை

எவ்வகையான மண்வகையிலும் தென்னை சிறப்பான பலனைத் தரும். கடினமான மண்களில் நடும்போது நடுகைக்குழியை நல்ல ஆழமானதாயும், அகலமுடையதாயும் அமைத்தல் அவசியம். தென்னையின் வேரானது நிலத்துக்குச் சமாந்தரமாகச் சுமார் முப்பது அடிவரை வளரும். ஆனால் தரைக்குச் செங்குத்தாக சுமார் மூன்று நான்கு அடி ஆழம் மட்டுமே செல்லும். எனவே வேர் வளர்ச்சிக்கு ஏதுவாக சொகுசுத் தன்மையாக உண்டாக்குத்தக்கதாக நடுகைக் குழிகள் அமைக்கப்படவேண்டும். நமது பகுதிகளில் தென்னை நாற்றுக்கள் கட்டாயமாக இருபத்திநாலு அடி சற்சதுர முறையிலேயே நடப்பட வேண்டும். அப்படியாயின் நாற்றுக்களுக்கிடையில் இருபத்திநாலு அடி நீளமும் இருபத்திநாலுஅடி அகலமும் என இடைவெளி விடப்படவேண்டும். இம்முறையில் ஒரு ஏக்கரில் எழுபத்தியாறு தென்னம்பிள்ளைகளை நடலாம்

தென்னை முன்பே சொல்லப்பட்டபடி மிக நீண்டகாலம் பலன் தரும் பயிராகையால் ஒழுங்கான முறையில் நாற்றுக்கள் நடப்படவேண்டும். ஒருவர் பரந்த அளவில் தெங்குச் செய்கையை மேற்கொள்ள விரும்புவராயின் இது பற்றிய அறிவை அவர் முதலில் பெற்றுக் கொள்ளவேண்டும்.

நாற்றுநட முன்பாக நடுகைக்குரிய காணியில் நடுகைக்குரிய குழிகள் நன்கு அனுபவமுள்ள ஒருவரால் கூனியடிக்கப்பட்டு அடையாளமிடப்படுவது மிகநல்லதாகும். குழிகள் மூன்றடி நீள, அகல ஆளத்தையுடையனவாக வெட்டப்படவேண்டும். குழிகளை வெட்டும்போது மேற்படை மண் சத்துள்ள செழுமையான மண் ஆகையால், அதனைக் கிழக்குப் பக்கமாயும் கீழ்மண்ணை மேற்குப் புறமாயும் போடுவதால், மீண்டும் குழிகளை நிரப்பும்போது கிழக்குப்பக்கமாக குவிக்கப்பட்ட மேல்மண்ணைப் பாவிக்கச் சுலபமானதான வழிமுறையாயிருக்கும்.

வெட்டப்பட்ட குழிகளில் குப்பை கூழத்தைப் போட்டெரிப்பதால் கறையானை ஓரளவு கட்டுப்படுத்தலாம். பின்பு குழியின்அடியில் இரண்டு படை பொச்சுமட்டையை தும்புப்பகுதி வானத்தைப் பார்த்த மாதிரி அடுக்கிய பின் அதன்மேல் பசளையையும் மேல்மண்ணையும் கலந்த கலவையை மொத்தக் குழியின் ஆழத்தில் அரைவாசிவரை போடவேண்டும். பொச்சு

### தாயகம

மட்டை அடுக்குவதற்குரிய பிரதான காரணம் நீரைப்பிடித்துவைப்பதட்காகும். ஆட்டெரு,மாட்டெரு, கூட்டெரு எதனையும் நடுகைக்குழியில் கலந்து போடலாம். இத்துடன் இளம் நாற்றுக்களுக்குரிய செயற்கை யுரத்தையும் ஒரு குழிக்கு ஒரு இருத்தல் எனக்

(7ம் பக்கம் பார்க்க)

## கலை பற்றி மேல்நாட்டு மேதைகள்

இறைவன் படைப்பில் மனிதன் இன்பம் காண்பதே எல்லா உன்னதக் கலையுமாம். அது கலைஞன் ஆக்கமன்று. —ரஸ்கின (1819-1900 ஆங்கிலத் திறனாய்வாளரும் சமூகச் சிந்தனையாளரும்.

கற்றவர் கலையின் காரணத்தை விளக்குவர். கல்லாதவர் இன்பத்தை உணர்வர்.—குயின்டிலியன் ரோமானிய பேச்சாளர்

தேவையே பயனுள்ள கலையின் தாய்! சுகபோகம் நுண்கலையின் தாய். அறிவு முன்னதன் தந்தை; ஒருவித போகமுள்ள மேதை பின்னதன் தந்தை.—ஷோபென்ஹோவர் (1788-1840 ஜெர்மன் தத்துவஞானி

க: கயிலாயநாதன்
(வட்டுக்கோட்டை கலாநிலைய ஆங்கிலப் போதனாசிரியரும் முன்னாள் அதிபரும், பலாலி ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளரும்)

செய்யுளோடு உரை நடையை ஒப்பிடல் போன்றே வரைதலில், நிறத்தோடு வடிவத்தை ஒக்கநோக்கல், சிந்தனையின் கூடுதலான இசைவும் ஒளியுமுள்ளகருவியாகும்.—இருவாட ஜேம்ஸன் (1794-1840) ஆங்கில நூலாசிரியர்

கலை இயற்கையைப் பிரதிசெய்வதில்லை. இயற்கையில் இதுகாறும் வெளிக்கொணரப்பெருத அழகை வெளியிட உதவும் மூலப்பொருளை இயற்கை ஈகின்றது. இயற்கை தன்னை உணர்வதைக் காட்டிலும், கலைஞன் அறிகின்றான்—ஏச ஜேம்ஸ் (1845-1916 அமெரிக்க நாவலாசிரியர்.

சாலச்சிறந்த எல்லாக் கலைகளும் மிகுந்த சமயச் சார்பானவை. உன்னதக் கலைஞன் என்றும் ஈடுபாடுடையவன். ஏழ்மை செய்பவன், போற்றுக் கலைஞனை எண்ணிப்பார்க்க முடிவதில்லை.— மிக்கேல் (1819ல பிறந்தவர்) ஸ்கொத்லாண்ட் போதகர், கல்விமான், நூலாசிரியர்.

கலைஞர் இறைவனுக்கு மிக அண்மையிலுள்ளவர், அவர்களின் ஆத்மாவுக்குள் அவன் உயிரையே சுவாசிக்கின்றான். அவர்களின் கைகளிலிருந்து, அழகான அழுத்தமான வடிவங்களில் உலகை ஆசீர்வதிக்க, அது வெளிவருகின்றது.—ஜ ஜி ஹொலண்ட (1819-1881) அமெரிக்க நூலாசிரியர்.

## குப்பி விளக்கு..

(5 ம் பக்கத் தொடர்ச்சி)
யிட்டுக் கேட்கின்றன.

அவன் உடம்பு உப்பி விட்டது. மனசில் இருந்த உற்சாகமும் கிட்டத்தட்டச் செத்துவிட்டது.

மலை உச்சிக்குத் தாவி ஏறி நின்று கீழே எட்டிப் பார்த்தான்.

இருள் கவிந்த அந்த லயங்களில் சனங்களின் ஈனக் குரல்களே அவலமாகக் கேட்கின்றன.

பாம்பின் வாய்த் தேரைபோல் அப்போது பூமியை இருள் கவிந்து விழுங்குகின்றது.

பரவலாக - ஏகாந்தமாக எழுந்து கிளரும் ஊதற்காற்று ஊமைக் குழல்மாதிரி இவன் செவிகளில் 'ஹோ' வென்று இரைகின்றது.

கூதல் அப்புகிறசாடை அப்போது ஓர் அரவம் மேனியில் விழுந்து நழுவி நெளிந்து நுளுந்திற்று.

'ஆ' என்று பயபீதியில் துள்ளிப் பாய்ந்த வீச்சில் பற்றைக் கட்டைகள் அவன் கால்களைச் சிராய்த்து விட்டன.

எழுந்து பார்த்தால், அது காற்றேடு அள்ளுப் பட்டு வந்த ஒரு சிறு தருப்பைப் புல் தண்டு.

'ஐயோடா...'

கிழவன் அஞ்சு ரூபா வாங்குவதற்காக என்னை ஏமாற்றி விட்டான். அவன் ஆடிய நாடகமெல்லாம் அதைப் பறிக்கும் வகைதான். எப்படியும் நாளைக்கு அந்தக் கிழவன் விடுதிக்கு வந்தாக வேண்டும்தானே?'

அவன் நம்பிக்கை தளர்ந்து மனம் முறிந்து விட்டது. தேகம் சோர்ந்து விட்டது. என்றாலும், 'சரி நாளைக்குப் பாத்துக் கொள்ளலாம்' என்ற ஒரு சுய திருப்தியுடன் மெல்லத் திரும்பினான்.

என்ன அதிசயம். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி, கிழவனே வந்து கொண்டிருந்தான்.

கிழவனைக் கண்டதே, அவன் புத்துணர்வு பெற்று, அவன் ஆலேகித்து நிற்கும் அந்தப் புதிய அனுபவத்தைப்பற்றிய சிந்தனை சிக்கலடித்தது.

'அ... தொரே வந்துட்டீங்களா?'

'எப்பவோ வந்திட்டேனே...?

'சந்தோஷம். இனி வாங்க போவம்'

'எங்கே போவது?' என்றும் இவன் கேட்கவில்லை. கிழவன் முன்னே நடந்து, இந்த மலை உச்சியைக் கிழித்துச் செல்கின்ற செங்குத்தான ஒற்றையடிப் பாதையால் இறங்கி கைகளால் திசை காட்டிக் காட்டிக் கொண்டு நடந்தான்.

'துரை' கிழவன் பின்னே தொடர்ந்து கொண்டிருந்தார்.

(வளரும்)

## காலத்தால்..

(5ம் பக்கத் தொடர்ச்சி)
யாக வந்த அரசன் கொடியவனாக இருந்தபடியால் ஜனங்கள் புரட்சி செய்து அவனை ஒழித்தார்கள். அதற்கு பிறகு ஷாங் அல்லது இன் வம்சம் அதிகாரத்துக்கு வந்து 650 ஆண்டுகள் அரசாண்டது.

ஒரு சின்ன பந்தியில் இரண்டு மூன்று வாக்கியங்களில் சீனாவின் ஆயிரம் வருடத்து சரித்திரத்தைச் சொல்லி முடித்து விட்டேன். இது ஆச்சரிய மல்லவா?

நான் இங்கு இவ்வாறு ஒரு சின்னப் பந்தியில் அடக்கிச் சொன்னாலும் அதனால் அந்த 1000 அல்லது 1100 வருடங்களின் கால அளவு குறைந்துவிடவில்லை என்பதை நீ உணர வேண்டும். நாட்கள், மாதங்கள், வருடங்கள் என்று இவ்வாறு பார்ப்பது நமக்கு வழக்கம்.

ஒரு நூறு வருடங்களைப் பற்றிக்கூட நீ தெளிவாகத் தெரிந்து கொள்வது கடினம். உனக்கு வயது பதின்மூன்று. இந்த பதின்மூன்று வருடங்களே உனக்குப் பெரிதாகத் தோன்றவில்லையா? அப்படி இருக்கும்போது ஆயிரம் வருடத்து சரித்திரத்தை நீ உன் மனதில் எப்படிப் பாவிக்க முடியும்?

இது மிக நீண்ட காலம். பல தலைமுறைகள் ஒன்றன் பின் ஒன்று வந்து போகின்றன. சிறிய பட்டணங்கள் பெரிய பட்டணங்களாகிப் பின் மறைந்து போகின்றன. அந்த இடத்திலே வேறு புதிய நகரங்கள் முளைக்கின்றன.

கடந்த ஆயிரம் வருடத்து சரித்திரத்தைச் சிந்தித்துப் பார்த்தால் அந்த ஆயிரம் வருடத்தைப் பற்றி ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். கடந்த ஆயிரம் ஆண்டுகளில் உலகத்தில் எத்தனை ஆச்சரியப்படத்தக்க மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன.

(மிகுதி அடுத்த வாரம்)

## பதினேழு..!

(5 ம் பக்கத் தொடர்ச்சி)
காலத்தில் 1960 ஆம் ஆண்டில் நாம் நடத்திய நெசவு நிலையத்தில் மாதர் விடுதிச்சாலை அமைக்க வேண்டியிருந்தது. இதற்கு 'சேர்விஸ் சிவில் இண்டர்னஷனல்' என்ற சர்வதேச இயக்கத்தின் உதவி கிடைத்தது.

பதினேழு தேசங்களைச் சார்ந்த 27 யுவர்களும், யுவதிகளும் நீர்வேலிக் கிராமத்துக்கு வருகை தந்து இங்கு எம்முடன் தங்கி வாழ்ந்து சிரமதானம் மூலம் அவ்விடுதிச் சாலையை அமைத்துத் தந்தார்கள். அக் கட்டிடத்துக்குத் தேவைப்பட்ட மூலப்பொருள்களை மட்டுமே வழங்கினோம்.

பதினேழு தேசத்து இளைஞர்கள் நமதுகிராம மக்களுடன் பழகியமையும் தமது கருத்துக்களையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டமையும், அதனால் நமது மக்களிடையே புதிய பார்வை ஏற்பட்டமையும் பயன்பாடும் மகிழ்ச்சியும் மிக்க அம்சமாக அமைந்தது.

—இவ்வாறு தமது நினைவலைகளை சஞ்சீவி வாசகர்களுக்கு வழங்கினார் திருமதி. கந்தையா. ★

## பெண் அடிமை..!

(4ம் பக்கத் தொடர்ச்சி)
வருகின்றன. அதாவது ஒரு ஆண் எப்படியும் வாழலாம் ஆனால் பெண் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கருத்து பொதுவாக நிலவி வருகிறது. கற்பு என்பது இருபாலாருக்கும் பொதுவானது என்ற நிலை ஏற்படும் [illegible] உணரப்படும்வரை [illegible]ருக ஒழிக்க முடியாது. ★

## பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

### குளிர்சாதன சாதனை

சாதாரண செங்கல், மண், மூங்கில், சாக்கு ஆகியவற்றைக் கொண்டு இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழக விஞ்ஞானிகள் குளிர்ப்பெட்டி ஒன்றை உருவாக்கி உள்ளனர்.

இதனுள் 90 நாட்கள் வரை காய்கறிகள், பழங்களைப் பழுதடையாமல் வைத்திருக்க முடியுமாம். விலை யோ கொள்ளை மலிவு! இலங்கை நாணயப்படி 500 ரூபாதான்! இதற்கு மின்சாரமும் தேவையில்லை.

### நிலத்துக்கடியில் புகைவண்டிப் பாதைகள்

போக்கு வரத்தும் இடநெருக்கடியும் அதிகமான இடங்களில் பூமிக்கு அடியில் புகைவண்டிப் பாதைகளை அமைத்து அதிலே புகைவண்டிகளைச் செலுத்துகிறார்கள். இன்று உலகின் முக்கியமான நகரங்களில் தரையடிப்புகை வண்டிப்பாதைகள் உள்ளன.

தரையடிப் புகைவண்டிப் பாதைகளை இரண்டு விதமாக அமைக்கிறார்கள். வீதிகளை வெட்டி பள்ளத்தில் புகைவண்டிக்கான பாதைகளை அமைத்து பின்னர் மேலே மூடி மீண்டும் வீதிகளை அமைப்பது ஒருமுறை. இம்முறையில் அமைந்த பாதைகள் செவ்வக வடிவில் இருக்கும். ஒரு குறிப்பிட்ட ஆழத்தில் நிலத்தைக் குடைந்து கொண்டே சென்று குடைவுவழி அமைத்து அதில் புகையிரதப் பாதைகளை அமைப்பது மற்றைய முறையாகும். இம்முறையில் அமைக்கப்பட்ட பாதைகள் வட்ட வடிவிலோ அரைவட்ட வடிவிலோ குழாய் போல அமைந்திருக்கும். இம்முறையில் அமைக்கும் பொழுது மேலே உள்ள வீதியில் போக்குவரத்து தடைப்படாமல் இருக்கும். ஆறுகளுக்கு அடியிலும் தரையடிப் புகைவண்டிகள் ஓடுகின்றன.

உலகில் முதன் முதலில் தரையடிப்புகைவண்டிப் பாதை 1863-இல் லண்டன் நகரில் அமைக்கப்பட்டது. அப்போது நீராவி இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. இன்று ஓடும் புகைவண்டிகள் மின்சாரத்தால் இயங்குகின்றன. மேலே இருந்து தரையடிப்புகையிரத நிலையத்திற்குச் செல்வதற்கு வாகனப்போக்குவரத்து உள்ளது. உலகிலேயே மிகப்பெரிய புகைவண்டிப்பாதை ஜப்பானின் தலைநகரமாகிய டோக்கியோவில் உள்ளது. ★

### விண்ணில் ஒரு தீவு

1990ம் ஆண்டளவில் ரஷ்யா, வானில் ஒரு விண்வெளி நிலையம் உருவாக்கப் போகிறது.

இதற்காக தற்சமயம் ரகசியமாக ஐந்நூறு மகா புத்திசாலி மாணவர்கள் (பத்து வயது முதல் பதினேழு வயது வரை நிரம்பியவர்கள்) பயிற்சி பெறுகின்றார்கள்.

1990 ம் ஆண்டுக்குள் குறைந்தது 1200 மாணவர்களுக்காவது பயிற்சி அளித்து, வானில் அவர்களை வைத்துக் கொண்டு அழகிய தீவை உருவாக்கப் போகிறார்கள்.

இதற்காக இந்த மாணவர்களுக்கு வானசாஸ்திரம், ரொக்கட்டுகளின் நிலை, செயற்கைக் கிரகங்களின் அமைப்பு ஆகியவற்றை பெரிய மனிதர்களுக்கு போதிப்பது போலவே போதித்து வருகிறார்கள்.

இதில் பயிற்சி பெறும் ஒரு மாணவன் கூறினான். "இந்த பரந்த உலகத்தில் வேறு எங்கோ நம்மைப்போல் ஜீவராசிகள் நிச்சயம் வாழ்கிறார்கள். அதைக்கண்டு பிடிப்பதே எங்கள் வேலை. நிச்சயம் கண்டு பிடிப்போம்." என்றான்.

### எம்.ஜி.ஆர்.விசிறியின் 'டூப்' விளையாட்டு

ஏப்ரல் முதலாம் திகதி.

எம். ஜி. ஆர். விசிறியும் அ. தி. மு. க அபிமானியுமான தியாகராஜன் என்பவர் மறக்க முடியாத செயல் ஒன்றைச் செய்ய நினைத்தார்.

வேட்டி, சில்க் சட்டை போட்டுக்கொண்ட தியாகராஜன் கறுப்புக்கண்ணாடி அணிந்து எம்.ஜி ஆர், போன்று தொப்பியும் போட்டுக் கொண்டார்,

நேராக தமிழ்நாடு சட்டசபைக்குச் சென்றார். பொதுமக்கள் கலரியில் போய் அமர்ந்து கொண்டார்.

சட்டசபை உறுப்பினர்கள் எல்லாரும் அவரையே திரும்பிப் பார்த்தனர்.

சபாநாயகரின் அனுமதியுடன் சபைக் காவலாளர்கள் தியாகராஜனை வெளியே கொண்டு வந்தனர்.

தியாகராஜனிடம் இருந்து தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் பறிக்கப்பட்டன.

அதன் பின்னர் தான் சட்டசபைக் கூட்டத்தைப் பார்க்க தியாகராஜன் அனுமதிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் சூடு இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 7
தனது பிறந்த நாளைக் கொண்டாடிவிட்டு அதிகாலையில் கடற்றொழிலுக்குச் சென்ற இளைஞன், கடற்படையினர் சுட்டதால் மரணமானதாகக் கூறப்படுகிறது.

குடத்தனை மணற்காட்டைச் சேர்ந்த வின்சன் றிச்சர்ட் ஞானதாஸ் என்ற 21 வயது இளைஞரே இப்படி மரணமானவராவர்.

இவர் கடந்த புதன் கிழமை தனது பிறந்த நாளைக் கொண்டாடிவிட்டு, நேற்று அதிகாலை 4 மணியளவில் தொழிலுக்குச் சென்றாராம்.

இவருடன் பொன்கலன் என்ற நண்பரும் கூடச் சென்றார்.

கரையிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் வைத்து கடற்படையினர் இவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

இவரோடு கூடச் சென்றவர் கடலில் குதித்து நீந்தி கரைக்கு வந்துவிட்டார்.

அவர் சொன்ன தகவலின் பேரில் ஊர் மக்கள் கடலில் காலஞ்சென்றவரைத்தேடிப்பார்த்தனர்.

காலஞ்சென்றவர் தலையிலும் கழுத்திலும் சூட்டுக் காயங்களுடன் படகில் இறந்துகிடப்பதைக் கண்டு, அவரது சடலத்தைக் கரைக்குக்கொண்டு வந்தனர். (உ-5)

## பட்டப் பகலில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 7
வண்ணார்பண்ணையில் உள்ள அச்சக முகாமையாளர் வீடொன்றில் இருந்து பதினறு பவுண் நகைகளும் கமரா ஒன்றும் பட்டப்பகலில் திருட்டுப் போயின.

வியாழன் பகல் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

வீட்டில் எவரும் இல்லாத சமயம் இனந்தெரியாத சிலர் வீட்டின் ஓடுகளைக் கழற்றி, வீட்டினுள் இறங்கி இந்தத் துணிகரத் திருட்டை நடத்தியதாகத் தெரிய வருகிறது. (உ- 10)

## இடை வழியில் நின்ற பஸ்

மட்டக்களப்பு, ஜூன் 7
திருகோணமலை செல்லும் தமிழ்ப் பயணிகள் தாக்கப்படுகின்றார்கள் என்ற தகவலைத் தொடர்ந்து மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்கு வியாழன காலை புறப்பட்ட இ. போ. ச. பஸ், ஒட்டமாவடியுடன் திருப்பப்பட்டது. (உ-எ-21)

## கைதான தமிழர்கள்

கொழும்பு, ஜூன் 7
கொழும்பில் உள்ள இலங்கை வங்கியின் கோட்டைக் கிளையிற் கைதான இரண்டு தமிழ் இளைஞர்களில் ஒருவர் கரவெட்டியைச் சேர்ந்த தர்மராசா என்று தெரிவிக்கப்படுகிறது.

மற்றவர் கொழும்பு தியவைக்கும் படையில் பணிபுரியும் உமாபதி. (உ-எ-2)

# கல்முனை நகரில் அடுத்தடுத்துக் கொள்ளை

கல்முனை, ஜூன் 7
கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு மிக அருகில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்களில் இனந்தெரியாத கோஷ்டியினர் புகுந்து கொள்ளை இட்டனர்.

புதன் இரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

டெலிவிஷன் பெட்டிகள் மற்றும் பொருள்கள் கொள்ளை இடப்பட்டன.

இதுபற்றி கல்முனைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது

இதேவேளை அரசுக்குச் சொந்தமான கல்முனை ஐஸ் தொழிற்சாலையிலும் கடந்த செவ்வாய்க் கிழமை இரண்டாவது முறையாக கொள்ளை இடப்பட்டது

வான் ஒன்றில் வந்த ஆயுதந்தாங்கிய இனந் தெரியாதவர்கள் இக் கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது. தொழிற்சாலையில் இருந்த பல பொருள்கள் கொள்ளை இடப்பட்டன காவலாளரிடம் இருந்த 300 ரூபா பணமும் கொள்ளை இடப்பட்டது. (உ-எ-84)

## அரசா-

(2 ம் பக்கத் தொடர்ச்சி)
டியாக விசாரணை செய்த போது அவரது கணவன் மரணமான சமயத்தில் ஓர் பதவி உயர்வு கிடைத்ததாகவும் அதனைப்பற்றி நிர்ணயித்த பின்னரே ஓய்வு ஊதியம் வழங்குவதற்குரிய படிவங்களை நிரப்பி அனுப்பலாம் எனவும் தெரிவிக்கப்பட்டதாம். முதலில் உரிய ஓய்வு ஊதியத்தை வழங்கி பின்னர் பிரச்சினையான விடயங்களைக் கவனிக்கக்கூடாதா?

## சிகிச்சை

கொழும்பு, ஜூன் 7
குண்டுப் புரளி தொடர்பாக கொள்ளுப்பிட்டியில் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட 13 வயது நிரம்பிய மாணிப்பாயைச் சேர்ந்ததமிழ்ச் சிறுமி உளரீதியான சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார் (உ-எ 2)

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது நேற்றைய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 40 98 |
| அமெ டாலர் | 27. 73 |
| இந்திய ரூபா | 2. 30 |
| மார்க் (ஜெர்மனி) | 12. 07 |
| கனடா டாலர் | 19. 69 |
| பிராங் (பிரெஞ்சு) | 3. 78 |
| பிராங் (சுவிஸ்) | 14 57 |
| அவுஸ். டாலர் | 19. 19 |

## கொழும்பில் தேடுதல்

கொழும்பு, ஜூன் 7
கொழும்பு மாநகரில் தமிழர் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் ஆயுதப்படையினர் பரவலாக தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, கிராண்ட்பாஸ், மட்டக்குளி, மருதானைப் பகுதிகளே தொடர்ந்து தேடுதல் வேட்டைக்கு இலக்காகிவரும் பகுதிகளாகும். (உ-எ-1)

# நல்லினத் தென்னைகளை. . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)
கலந்தால் நாற்றுக்கள் வேகமாயும், பசுமையாயும் வளரும்.

தென்னை நாற்றுக்களை நிலமட்டத்தில் இருந்து அதன் தேங்காய் ஒன்றரை அடி ஆழத்தில் இருக்கக் கூடியதாக நட வேண்டும். தேங்காயின் சிறிதளவு பகுதிவெளியில் தெரியக்கூடியதாக மண்ணால் மூடிவிட்ட பின் எஞ்சியுள்ள ஒன்றரை அடிக்குழியையும் தென்னம்பிள்ளை வளர வளர மண், பசளை என்பவற்றை இட்டு மூடிவரலாம்.

கூடியகாலம் மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய காணிகளிலும், ஊற்றுப் பிடிக்கக்கூடிய காணிகளிலும் நீர் வற்றிய பின்போ, ஊற்று வலித்த பின்போதான் நடுகை மேற்கொள்வது புத்திசாலித்தனமாகும். இப்படியான காணிகளில் தென்னைக்குரிய பசளைப் பிரயோகமும் நீர்வற்றிய பின்பே மேற்கொள்வது சிறந்தது.

தென்னை நாற்றுக்கள் நடும்போது உப்புப் போட்டு நடுவது ஒரு வழக்கமாகக் கொள்ளப்படுகிறது. உப்பில் தாவர போசணைப்பதார்த்தங்கள் இல்லை. அத்துடன் மண்ணின் நல்ல அம்சங்களையும் இது சீர்குலைத்து விடுமாகையால் உப்புப்போடக் கூடாது. அக்காலத்தில் கறையானைக் கட்டுப்படுத்த இரசாயன வழிமுறைகள் இல்லாததாலேயே விவசாயிகள்உப்பைப் பாவித்தனர். கறையானை அடக்க அல்ஜின், அல்ரெக்ஸ் போன்ற இரசாயனப் பொருள்கள் இருக்கின்றன இவற்றைக்கொண்டு நடுகைக் குழியை நனைப்பதாலும் தென்னை நாற்றின் தேங்காயை இதில் தோய்த்து நடுவதாலும்கறையானைக் கட்டுப்படுத்தலாம்

பொதுவாக இப்பகுதிகளில் தென்னம்பிள்ளையை நட்டபின் அதைக்கவனிப்பது ரொம்பக்குறைவு இதனால்தான் இங்கு மிக நீண்டகாலத்தின் பின்பே பலன்பெறமுடிகிறது நாற்றுக்களை நட்டபின் தேவையான போது நீரூற்றிப் பசளையிட்டு நோய் பூச்சிகளைக் கட்டுப்படுத்திப் பராமரித்து வந்தால் மிகவிரைவில் பலன்பெற முடியும்.

வீடுகளில் வீட்டுத் தோட்ட அடிப்படையில் நடப்படும் நாற்றுக்களுக்கு வீடுகளில் கிடைக்கும் கழிவுநீரைப் பாய்ச்சலாம். அத்துடன் அடுப்புச்சாம்பல், விவசாய உற்பத்திகளின் கழிவுப் பொருள்கள் ஆகியவற்றையும் உக்க வைத்து எருவாக இடலாம். குப்பை கூளத்தை வீணே கொட்டாது அவற்றைக் கூட்டெருவாகத் தயாரித்துப் போடலாம். செயற்கை பசளையான இளம்மர உரக்கலவையை நாற்று நட்டு அவை பாளைவரும் வரை வருடா வருடம் போடுவது சிறந்தது. அதன்பின்பே காய்க்கும் மரங்களுக்கான பசளைக் கலவையை உபயோகிக்கத்தொடங்கவேண்டும்.

இளம்மர உரக் கலவையை ஒருவர் பின்வருமாறு தாமே தயாரிக்கலாம். நாலுபங்கு அமோனியம் சல்பேற்று அல்லது இரண்டு பங்கு யூரியா, மூன்றுபங்கு சுப்பர் பொசுபேற்று, இரண்டு பங்கு மூரியேற் ஒவ் பொட்டாஸ் ஆகிய மூன்று தனிப் பசளைகளையும் ஒன்றாகக் கலந்தபின் இக்கலவையில், நாற்றின் வயதுக்கேற்றபடி வருடமொன்றுக்கு ஒரு இறுத்தல் என்ற அடிப்படையில் போடலாம். உதாரணம்: முதலாம் வருடம் ஒரு இறுத்தல், இரண்டாம் வருடம் இரண்டு இறுத்தல்.

வடமாகாணத்தில் உள்ள பெரும்பாலான தென்னந் தோட்டங்கள் ஆங்கிலேயரால் 1905-10ம் ஆண்டுகளில், சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பாக உண்டாக்கப்பட்டவையாகும். இத் தோட்டங்கள் தற்போது சோடையடித்து விளைவு குன்றிக் காணப்படுகின்றன. இப்படியான காணிகள் உடனடியாக கீழ் நடுகையோ அல்லது மீள் நடுகையோ சிறந்த நாற்றுக்களால் மேற்கொள்ளப்பட்டு புதிய தோட்டங்களாக மாற்றியமைக்கப்படுவது பிரதானமாகும்.

அரச ஊழியர்கள் தமது ஓய்வு காலத்தில் ஓய்வூதியம் பெறுவது போல் தெங்குச் செய்கையை சிறப்பாக மேற்கொள்ளும் ஒருவரும் தமது ஓய்வு காலத்தில் சிறந்த ஓய்வூதியத்தை தமது தோட்டத்தில் இருந்து பெறமுடியும் பிள்ளைகள் தம்பெற்றோரைப் பராமரியாது புறக்கணித்தாலும் தென்னையே தன்னைப் பேணி வளர்த்து உருவாக்கிய வரைக் கைவிடாது காக்கும் தன்மையுடையது. இதனையே'தென்னையைப் பெற்றால் இளநீர்,பிள்ளையைப் பெற்றாற் கண்ணீர்' எனக் கவிஞர் சொன்னாரோ?

(அடுத்தமுறை தெங்கு மானியம்.)

# அமெரிக்க வாட்டர் - - - -

(3ம் பக்கத் தொடர்ச்சி)
வழங்கப்படவில்லை, அவரின் ஆதரவாளர்களால் நடத்தப்படும் போலிக்கம்பெனிகள் ஊடாகவே கமிஷன் மார்க்கோஸுக்குப் போய்ச் சேர்ந்தது.

சிலசமயம் மார்க்கோஸின் உதவியாளர்கள் நேராக டோக்கியோ சென்று 'கமிஷன்' பணத்தைப் பெற்றனர்.

### அமெரிக்க நிறுவனம்

பிலிப்பீன்ஸில் அணுசக்தி நிலையம் ஒன்றை அமெரிக்க கம்பெனியான வெஸ்டிங்ஹவுஸ் எலக்டிரிக் நிறுவனம் நிறுவியது

21 கோடி டாலர் செலவிலான இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பைப் பெற்றுக் கொள்ள மார்கோஸின் போலிக்கம்பெனி ஒன்றுக்கு 1கோடி 70 லட்சம் டாலர் கமிஷனாகக் கொடுக்கப்பட்டது.

மார்க்கோஸுக்கு வழங்கப்பட்ட கமிஷன், இன்று 'அரசியல் வெடிகுண்டு, ஆக ஜப்பானில் மாறிவிட்டது.

மார்க்கோஸ் ஊழல் ஜூனில் (இம்மாதம்) நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைப் பாதிக்கக் கூடும் என்று ஜப்பானின் ஆளும் கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சி அச்சப்படுகிறது

அமெரிக்காவில் நிக்ஸனை பதவி இறக்கிய 'வாட்டர்கேட்' போன்று-.

ஜப்பானில் அரசியல் சூறாவளியை ஏற்படுத்தப் போகிறது 'மார்க்கோஸ் கேட் ஊழல்.

ஆதாரம்: பிஸ்னஸ் வீக்

# எங்களுக்கு மட்டும் தானு- - - -

(3 ம் பக்கத் தொடர்ச்சி)
கந்த புராணத்தில் இருக்கும் என்று கூறுவது கிராமிய வழக்கு. எனவே இன்று அல்லும் பகலும் அனவரதமும் எம்மை நிலைகுலைய வைக்கும் ஷெல் பற்றி அந்தப் புராணத்தில் இருக்கிறதா என்று பார்த்தேன். என்ன ஆச்சரியம்! கந்த புராணத்தில் சிங்கமுகாசுரனின் ஆயுதம் பகைவரை எப்படி எப்படி எல்லாம் துளைத்துச் சென்றது என்ற விவரம் இருந்தது.

சிங்கமுகாசுரனின் ஆயுதம் ஒன்று சிற்சில பூதரை மிதித்துக் கொல்லும், மேலே எற்றி அடியினாலும் சில பூதரைக் கொல்லும். சிலசில வீரரை உடல் நசுக்கியும் கொல்லும். இடியேறு போல உதைத்தும் கொல்லும் என்று யுத்த காண்டத்தில் சிங்கமுகாசுரன் படலத்தில் 143 வது பாடல் கூறுகின்றது. அதற்கும் ஷெல்' லுக்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறீர்கள். இப்பாடலில் ஷெல் என்ற சொல் இருக்கின்றது.

மிதித்துக் கொல்லுஞ் சிற் சிலர் தம்மைமிசையுந் திப்

பதத்திற் கொல்லுஞ் சிற் சிலர் தம்மைப் படிவத்தைச்

சிதைத்துக் கொல்லுஞ் சிற் சிலர் தம்மைச் செல்லென்ன

உதைத்துக் கொல்லும் சிற் சிலர் தம்மை யுலவுற்றே

செல் என்பதற்கு உரை சொல்லும் போது இடியேறு என்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது சொல்லுங்கள் ஷெல் கந்தபுராணத்திலிருந்து மேல் நாட்டிற்கு ஏற்று மதி செய்யப்பட்டதா இல்லையா என்று★


கூலி ஆட்கள் தேவை

மன்னார் நீர் விநியோகத் திட்டத்தில் தண்ணீர்க் குழாய்கள் தாழ்ப்பதற்குத் தேவையான கிடங்குகள் வெட்டுவதற்கு

ஆட்கள் தேவை

தினக்கூலி அடிப்படையில் அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேலை கொடுக்கப்படும்.

அடம்பன், வங்காலை ஆகிய வேலைத்தளங்களில் இருக்குமிடவசதியும் செய்து கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்;

பொறியியலாளர்,
மன்னார் நீர் விநியோகத் திட்டம்
சாமுவேல் சன்ஸ் அன்ட் கொம்பனி லிமிட்டட்,
மன்னார்.

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் எமது யாழ்ப்பாணக் கிளைக் காரியாலயத்தினூடாகத் தொடர்புகொள்ளவும்.


# பண்டிதமணி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
யார், வண்ணை விசுவநாத பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், சுழிபுரம் திருஞானசம்பந்தர், நல்லூர் தியாகராசபிள்ளை, கோப்பாய் சபாபதி நாவலர், அச்சுவேலி வேன் மயில்வாகனனார், சித்தன்கேணி அம்பலவாண நாவலர், வேலணை கந்தப்பிள்ளை முதலானோரும், தமிழ்நாட்டில் பெரும்புலவர்களாக விளங்கிய இராமசாமிப் பிள்ளை, நமசிவாயத் தம்பிரான், வன்றொண்டன் செட்டியார் ஆகியோரும்; யாழ்ப்பாணத்தவராய்த் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளுமாவர்.

இந்தத் தகவல்களையெல்லாம் சேகரித்துக் கொண்டதோடு, மனேச்சர் அவர்கள் நாவலர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் கனகரத்தின உபாத்தியாயரைத் தொடர்ந்து எழுதியுள்ளார். இன்னும் நாவலர் அவர்கள் இலங்கை நேசன் பத்திரிகையிலும் உதயபானு போன்ற பிறவெளியீடுகளிலும் சைவப்பிரகாசர் என வெளிப்படையாக வும், குமாரர், நல்லைச் சற்பக்ஷபாதி, சைவ சமயாபிமானி, வண்ணை நடு, கருணை, ஆப்தன், சனோபகாரி முதலாய புனை பெயர்களில் மறைந்து நின்றும் எழுதிய கட்டுரைகள், கண்டனங்கள், வேண்டுகோள்கள் முதலியவற்றையெல்லாம் நாவலர் பிரபந்தத்திரட்டு என்னும் பெயரில் இரண்டு பாகங்களாக வெளியிட்டுள்ளார்.


மனேச்சர் அவர்கள் தமது முன்னோர்களுள் ஒருவரான திருநெல்வேலி ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் செய்தருளிய பத்துக்கும் அதிகமான சமஸ்கிருத நூல்களின் வேறாக, எழுதியருளிய சிவஞான சித்தியாரின் அகலவுரைக்கு அப்பாலாய்த் தமிழில் எழுதிக் கிடைத்தற்கருமையாயிருந்த ஏடுகளைத் தேடி எடுத்து இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திற் பதிப்பித்தார். அவை தீட்சாலட்சணம்,தத்துவ வியாபாரவிவணம்,அவஸ்தாநிருபணம், மகாவாக்கிய சங்கிரகணம் என்பனவாம்.

இன்று இவற்றின் அச்சுப்பிரதிகளே கிடைத்தற்கருமையாகி விட்டன. இவற்றின் பிரதிகள் சிலசமயம் லண்டன் நூல் நிலையத்தில் அல்லது நூதனசாலையிற் கிடைக்கலாம் என்று கூறுவாருமுளர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 19



இடமிருந்து வலம்:
1. இலங்கையையும் இந்தியாவையும் பிரிப்பது.
6. தாண்டு என்பது மாறிப்போய்க் கிடக்கிறது
7. பொருள்.
9. எமது என்ற பொருள் தரும்
10. விட்டில் பாவிக்கும் கல்லாலான இயந்திரம்
13. விரோதம்
14. பாணம்
15. நிரை
16. மகன்
18. கொழும்பில் தமிழர்களிடம் இப்போது இது கேட்கிறார்கள்
19. ஏகாந்தம்
21. நடுவில் ஓர் எழுத்து வந்து விட்டால் பூட்டான் தலைநகர் வந்து விடும்
22. தோள்

மேலிருந்து கீழ்
1. எங்கும், எப்போதும் கவி செய்ய வல்லவன்
2. ஒரு மாதம்
3. எப்பிறப்பிலும் தொடர்வது இது
4. ஒரு கலயம்.
5. ஆட்டில் ஆண் இனம் மாறிக்கிடக்கிறது
8. எழுதுகோல்
9. இவ்வழி நின்றால் நல்லது
11. பூமியை ஆக்கிரமித்து இருப்பது
12. ஒரு இசைக்கருவி
13. உத்தரவு
14. திருமணமாகாத இளம் பெண்
15. தமிழர்கள் இப்போது நாளாந்தம் இப்படித்தான் ஆகிக் கொண்டிருக்கிறார்கள்
16. இதுவும் ஒருவகைக் கலயம் தான்
17. கொலை
20. உணவுப் பொருளாக பாவிக்கப்படும் ஒரு மாவகை இந்தியாவில் தான் அதிகம் பாவனையில் இருக்கிறது.

அனுப்புவோர் பெயர்; ..............................

விலாசம்; ..............................

..............................

கையெழுத்து; ..............................

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்

2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.

3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.

4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்

5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 19. சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

7. உதயன் பப்ளிகேசன்ஸ் லிமிட்டெட், தஷ்பறு - உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிகோ பினுன்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

★ சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது சில சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதுவோரிலிருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

### வெற்றி பெற்றவர்கள் விவரம்

சொற்சிலம்பம் இல 16

முதலாம் பரிசு:- இ. முரளீதரன், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

இரண்டாம் பரிசு:- அ. ஞானேஸ்வரி, மிதிலை, அன்ரனிஸ் லேன், பாஷையூர்.

மூன்றாம் பரிசு:- மா. சிவப்பிரகாசம், 'லிங்கா வாசா' கைதடி மேற்கு, கைதடி.

சொற்சிலம்பம் இல 17

முதலாம் பரிசு:- ம. அருட்செல்வி, மே/பா ச. மகாலிங்கம், தண்ணீரூற்று, முள்ளியவளை.

இரண்டாம் பரிசு:- எஸ்.ஆர். பேரின்பநாயகம், 'சுரேஷ் வாசா' பலாலி, வயாவிளான்.

மூன்றாவது பரிசு:- ஜே. விஜி, மே/பா சு. நல்லையா, இணுவில் மேற்கு, இணுவில்.

### சொற்சிலம்பம் விடைகள்

இல. 16

இடமிருந்து வலம்
1. அமுதம் 4. அவன்
6. கழுகு 7. கவலை
8. திருமதி 10. திசை
12. தக 13. கைராசி
16. அரம் 18. கலவரம்
20. ரதம் 22. இனி
24. கலை 25. கார்
26. ஔவை

மேலிருந்து கீழ்
1. அகராதி 2. முழு
3. தகுதி 4. அவதி
5. வலை 7. கமம்
9. பாகம் 11. சைகை
12. தரம் 14. ராகம்
15. சில 16. அரனி
17. சிரசு 19. வகிர்
21. தலை 23. கவை

இல 17

இடமிருந்துவலம்
1. அழித்தல் 3. பாதி
6. புகுதல் 9. மதி
11. தனிமை 12. பதுக்கு
14. யசோதரை 15. நான்
16. கால் 17. சத
18. தகனம் 19. கம்பீரம்
20. புசி

மேலிருந்து கீழ்
1. அற்புதம் 2. தனல்
4. திணை 5. மாமதுரை
7. குனி 8. தமையன்
10. இக் 12. பதக்கம்
13. குரல் 15. நாதம்
19. காம்பு 17. சக
18. தர.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

**உரும்பராயில் சகாய விற்பனை**

9, 10-6-86இல் உரும்பராய் இந்துக் கல்லூரி பவள விழா அரங்கில் மில்க்வைற் காட்சிச்சாலையில் மில்க்வைற் தயாரிப்புக்களை ரூ. 15/-க்கு வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், வீட்டுத் தோட்டத்திற்குரிய கீரை விதைகளும் அறிவு நூல்களும் இலவசமாக வழங்கப்படும் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

07 06 1986 சனிக்கிழமை

**மானிப்பாயில் சகாய விற்பனை**

12-6-86இல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் பொருட்காட்சியில், மில்க்வைற் காட்சிச்சாலையில் மில்க்வைற் தயாரிப்புக்களை ரூ 15/-க்கு வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், வீட்டுத் தோட்டத்திற்கான கீரை விதைகளும் அறிவு நூல்களும் இலவசமாக வழங்கப்படும். மேலுறைகளைச் சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# பஞ்சாப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு வருமா?

## 21 ஆம் திகதி ஒப்பந்தம் அமுல்

பஞ்சாப் தொடர்பான லோங்கோவால்— ராஜீவ் ஒப்பந்தத்தை அமுல் செய்ய இன்னும் இரண்டு வாரங்களே இருக்கின்றன.

எதிர்வரும் 21 ஆம் திகதி இதற்கான திகதி குறிக்கப்பட்டிருக்கிறது

இதற்கு முன்னர் கடந்த ஜனவரி 26ஆம் திகதி அதாவது இந்தியக் குடியரசுத் தினத்தன்று இந்த ஒப்பந்தத்தை அமுல் செய்ய திகதி குறிக்கப்பட்டிருந்தது.

எனினும் குறிப்பிட்ட தினத்தில் அது கைகூடவில்லை

தற்போது பிரதமர் ராஜீவ் காந்தி மீண்டும்

மர் ராஜீவ் காந்தி உறுதியாக இருக்கிறார்.

பஜன்லாலின் முதன் மந்திரி பதவி பறிபோனது இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது

இந்திரா கொலையை அடுத்து லோங்கோவால் ராஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்தானபோது ஹரியானா முதல்வர் பஜன்லாலின் ஆதரவும் ஒப்பந்தத்துக்கு இருந்தது.

பின்னர் ஹரியானாவில் உள்ள பெரும்பான்மை இந்துக்களின் நெருக்குதல் காரணமாக பஜன்லால் எதிர்ப்பாளியாக மாறினார்

லோங்கோவால்— ராஜீவ் ஒப்பந்தம் மூலம்

யப்படுவதை ஹரியானாவின் தீவிரவாத இந்துக்களும் பஞ்சாப்பின் தீவிரவாத சீக்கியர்களும் வன்மையாக எதிர்க்கிறார்கள்

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் லோங்கோவால் சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்

இவரின் கொலையை அடுத்து முதன்மந்திரி பதவியை ஏற்ற சுர்ஜித் சிங் பர்னாலா ஒப்பந்தத்தை அமுல் செய்வதன் மூலம் பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம் என்று நினைக்கிறார்.

அதேசமயம் கடந்த

## உலக உலா

**என்.பி. சீலன்**

இதற்கான திகதியை தீர்மானித்துள்ளார்.

ஹரியானாவில் சில அரசியல் மாற்றங்களைச் செய்ததன் மூலம் இந்த ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கு இருந்த கடைசி முட்டுக்கட்டையையும் பிரதமர் ராஜீவ் காந்தி நீக்கி விட்டார்.

### பஜன்லால் பதவி துறப்பு

ஒப்பந்தத்தை எதிர்த்து வந்த ஹரியானா முதலமைச்சர் பஜன்லால் பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ளார்.

மத்தியபோக்குவரத்து அமைச்சராக இருந்த பன்சிலால் ஹரியானாவின் புதிய முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துள்ளார்

பன்சிலாலின் மத்திய போக்குவரத்து அமைச்சை பிரதமர் ராஜீவ் காந்தியே தன் பொறுப்பில் வைத்துக் கொண்டுள்ளார். புதியவர் எவரும் இது எழுதப்படும் வரை நியமிக்கப்படவில்லை.

இந்த ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் பிரத

சண்டிகார் நகரம் முழுமையாக பஞ்சாப்புடன் இணைக்கப்படுகிறது தற்போது பஞ்சாப்பில் உள்ள 54 கிராமங்களும் இரு நகரங்களும் ஹரியானாவுடன் இணைக்கப்படுகின்றன.

சண்டிகார் தற்போது பஞ்சாப்புக்கும் ஹரியானாவுக்கும் பொதுவான தலைநகராக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது

இது பஞ்சாப்புடன் முழுதாக இணைக்கப்படுவதை அடுத்து ஹரியானா புதிய தலைநகர் ஒன்றை உருவாக்க வேண்டிய நிலை உண்டு.

ஹரியானாவுடன் இணைக்கப்பட உள்ள 54 கிராமங்களும் இரு நகரங்களும் பஞ்சாப்பில் இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இடங்கள் ஆகும். பஞ்சாப்— ஹரியானா எல்லையில் இவை அமைந்துள்ளன.

### தீவிரவாதிகள் எதிர்ப்பு

ஒப்பந்தம் அமுல் செய்

இரு மாதகாலத்தில் இரு தடவை சீக்கியர்களின் புனித ஸ்தலமான பொற்கோயிலுக்குள் படைகளை அனுப்பி தீவிரவாதிகள் பிரச்சினையில் மிகவும் துணிச்சலாகச் செயலாற்றி வருகிறார்.

இந்திரா கொலையை அடுத்து ராஜீவ் பதவி ஏற்றவுடன் உள்நாட்டுப் பிரச்சினைகளில் ஒரு சுமுகமான அணுகு முறையை கையாள ஆரம்பித்தார். இதன் பிரதிபலனே பஞ்சாப் ஒப்பந்தம் ஆகும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வருவதன் மூலம் பஞ்சாப் பிரச்சினை தீர்ந்துவிடுமா? என்பதே இன்றுள்ள முக்கிய கேள்வி ஆகும்.

இந்தியாவின் எதிரி நாடான பாகிஸ்தான் எல்லையில் பஞ்சாப் அமைந்திருப்பதால் இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பது அவ்வளவு சுலபம் அல்ல.

## அரச அதிகாரி---

யார் தூரத்தில் விழுந்தது.

உடனே அரச அதிபரும் நாங்களும் லொறியில் இருந்து இறங்கி பாதுகாப்பான இடத்திற்கு நகர்ந்தோம்

பின்னர் ஹெலிக்கொப்டர் ஒன்று வானத்தில் வட்டமிட்டபடி அப் பக்கத்தில் சுடத் தொடங்கியது. சாரதிகள் அருள்நாதனும், செல்லையா கௌதமராஜாவும் லொறியிலிருந்து இறங்குவதற்காக வெளியே தலையை நீட்டியவர்கள் 'ஹெலி'யில் இருந்து சூடு வந்ததும் உள்ளே தலையை இழுத்துக் கொண்டார்கள்.

அதைத் தொடர்ந்து இன்னொரு ஷெல் லொறி மீது விழுந்தது. லொறி எரிந்து சாம்பரானது. உள்ளே இருந்த அருள்நாதனும் கௌதமராஜாவும் லொறியோடு எரிந்து போனார்கள்.

இப்படி அந்த அதிகாரி மயிர்க்கூச்செறியக் குறிப்பிட்டார். (உ - எ)

## வெடி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகம்

அலுவலகம் ஒன்றில் தொலைபேசி கணீர் என்றால், அதனை எடுப்பவர்கள் வெடி குண்டுத் தகவல் வராமல் இருக்க வேண்டும் என்ற மன நேர்த்தியுடன் அதனைத் தூக்கும் அளவுக்கு குண்டுப் புரளி கொழும்பை உலுக்குகிறது.

அப்பாடா இந்த வெடி செய்யும் விபரீதம்!

**கார், வான் சாரதி தேவை**

கார், வான் ஓட்டக்கூடிய சாரதி தேவை. சகல விவரங்களுடன் கூடிய விண்ணப்பத்துடன் உதயன், சஞ்சீவி பணிமனையில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

உதயன் சஞ்சீவி பணிமனை
15, 2 ஆவது ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## வடகு...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வான் அச்சுவேலி தென்மூலைப் பகுதியை நண்பகல் 12-45 மணியளவில் அண்டியது

அவ் வேளை திடீரெனப் பறந்துவந்த ஹெலிக்கொப்டர் ஒன்று இந்தவானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இதனையடுத்து சாரதி வானை அதி வேகமாகச் செலுத்தினர்.

எனினும் தொடர்ந்தும் ஹெலிக்கொப்டர் துரத்தித் துரத்திச் சுட்டது.

வானில் இருந்தோர் பயத்தினால் தங்கள் நகைகளைக் கட்டிப்பிடித்தபடி கத்திக் கூக்குரலிட்டனர்.

வானின் கூடாரத்தைத் துளைத்துக்கொண்டு வந்த சன்னங்கள் முன் சீற்றில் இருந்தவர்களைத் தாக்கியது.

கைகளில் இருந்த நகைகள் சிதறின. காயமடைந்தோர் வாகனங்களில் படுத்துக்கொண்டனர்.

அச்சுவேலி தொழிற்பேட்டைவரை இந்த வானைநோக்கி ஹெலிக்கொப்டர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சின்னராசா (48 வயது), கம்பர்மலையைச் சேர்ந்த வல்லிபுரம் இரட்ணசிங்கம் (வயது 30) ஆகிய இருவரும் உயிரிழந்தனர்.

காயமடைந்த மற்றைய இருவரும் வருமாறு:-

எஸ். இராசதுரை (39 வயது) வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். இவருக்கு கைகளில் காயம் ஏற்பட்டுள்ளது. தன்னுடைய நகைகளையும் பத்திரமாக யாழ் ஆஸ்பத்திரியில் வைத்திருந்தார்.

சித்திரவேல் ஆனந்த வடிவேல் (40 வயது), கரவெட்டி வாசி

இவருக்கு கையில் காயம் ஏற்பட்டுள்ளது.

இவர் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றுகிறார். (உ-10-119)

## கிளிநொச்சி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகளும் கடந்த மூன்று நாட்களாக இப் பகுதிகளில் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.

இதன் காரணமாகக் காயமடைந்த மேலும் பலர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி முகாமிலிருந்து தொடர்ந்தும் ஏவப்படும் ஷெல் குண்டுகள் முறிகண்டிவரை விழுந்து வெடிப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

காயமடைந்த பல பொதுமக்கள், இளைஞர்களின் உதவியுடன் யாழ் வைத்தியசாலையில் நேற்றும் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் விவரம் வருமாறு;

வேலுப்பிள்ளை கந்தசாமி, (23 வயது) கனகபுரம்.

சுப்பையா இராமலிங்கம், (44 வயது) கனகபுரம்

சந்திரபாமினி, (20 வயது) கிளிநொச்சி.

## உள்ளும் புறமும்

**குறுமுனி**

# அனுராதபுரம் திம்புவில்...

## கொழும்பு ---- எங்கே முடியும்?

குண்டுக்கு மேல் குண்டு அதையும் மிஞ்சி குண்டுப் புரளி — கொழும்பு மாநகரைக் கலக்கி வருகின்றது.

கொழும்புக் கல்லூரிகள் காலிமுகக் கடற்கரை, ஐந்து ஸ்டார் ஹோட்டல்கள் எல்லாமே பெரும்பாலும் காலி.

ஆபத்து படலைக்கு வந்து விட்டது ஆபத்பாந்தவர்கள் என்று நம்பப்பட்டவர்களாலும் பிரயோசனம் இல்லை.

இனி என்ன! கீறல் விழுந்த றெக்கோட்டைப் போடவேண்டியதுதான். போட்டாகிவிட்டது.

முதலில் பிரதமர் ராஜீவ் காந்திக்கு நீண்ட கடிதம் அனுப்பப்பட்டுவிட்டது

பேச்சுக்கள் நடத்தும் சூழ்நிலையை உருவாக்க வன்செயல்களை நிறுத்தும்படி தீவிரவாதிகளைக் கட்டுப் படுத்துங்கள்.

பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண தமிழர் அமைப்புக்களை ஒன்றுக்கு அனுப்புங்கள்.

இவைதான் நீண்ட கடிதத்தில் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்கள்.

**இரண்டு அமைச்சர் குழு**

புதுடில்லி சென்று பேச்சுக்களை நடத்த 'இரண்டு அமைச்சர்'' குழு ஒன்றையும் இலங்கை அனுப்பப் போகின்றது.

நிச்சயம் அக்குழுவில் அமைச்சர் அத்துலத் முதலி இருக்கமாட்டார். இது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கூறப்படும் விஷயம்.

குழுவுக்குப் பெரும்பாலும் வெளிவிவகார அமைச்சர் ஹமீது தலைமை வகிக்கலாம். மற்ற அமைச்சர், பெரும்பாலும், எஸ்மண்டின் மகனான கல்வி அமைச்சர் ரணில் விக்ரமசிங்கா ஆக இருக்குமோ? தெரியவில்லை.

அக்குழு போய்ப் பிரதமர் காந்தியிடம் ஒன்றைத்தான் கேட்கப் போகிறதாம்.

வடக்கு --- கிழக்கு இணைப்பு விஷயம் தான் இன்று தீர்வுக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது அதைக் கைவிடச் சொல்லி தமிழர் அமைப்புக்களை நிர்ப்பந்தியுங்கள்---

இப்படி பிரதமர் காந்தியிடம் விண்ணப்பித்துக் கொள்வதே அமைச்சர் குழுவின் முக்கிய பணியாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது-

சாட்சிக்காரன் காலில் விழுவதைப் பார்க்கிலும் சண்டைக்காரன் காலில் விழுவது மேல் என்று தீர்மானித்து விட்டார்களோ?

இதுதான் இன்றைய கொழும்பு அரசு வட்டாரங்களின் நிலை.

**நிலைமை புரிகிறது**

சிங்களப் பகுதிகளில் இடம்பெறும் குண்டு வெடிப்புக்கள் இப்போது தான் சிங்கள மக்களுக்கு ஆபத்தை உணர்த்துகின்றன.

வடக்கு — கிழக்கில் குண்டு வெடித்தால் என்ன, வானத்தில் இருந்து குண்டு விழுந்தால் தான் என்ன என்று வாழ்ந்தவர்களுக்கு இப்போதுதான் 'நிலைமை' புரிகிறது.

நிம்மதியாக வாழமுடியாத நிலை அவர்களுக்கும் ஏற்பட்டு விட்டது

அதனால் அதிருப்தி அடைந்து வரும் சிங்கள மக்களின் மன நிலையைத் திசை திருப்பும் முயற்சியாக மீண்டும் சர்வகட்சி மாநாடு என்ற பேச்சு

நெருக்கடி தலைக்கு மேலே போகும் அளவு வந்து விட்டது.

இனி எல்லாரையும் அணைத்துக்கொண்டு போகும் (மூழ்கும்?) எண்ணமோ!

இணைப்பு விஷயம்தான் இரு தரப்பினருக்கும் பெரும் இடைவெளியாக உள்ளது. இந்த இடைவெளியை எப்படி இணைப்பது?

**இந்தியா உணர்த்திவிட்டது**

சிதம்பரம் குழு கொழும்பு வந்த சமயம் இணைப்புப்பற்றி இலங்கை அரசுத் தலைவர்களுக்கு இறுக்கமாகக் கூறிவிட்டதாம்.

இதற்கு மேலாக வந்த கையோடு வெளியுறவு அமைச்சர் சிவ்சங்கர் ''தமிழருக்கு நாம் ஆதரவு கொடுப்போம்'' என்று ராஜ்ய சபாவில் வெளிப்படையாகக் கூறிவிட்டார்.

இது எல்லாம் இந்திய அரசுத் தலைவர்களின் மன நிலையை இலங்கைக்கு நன்றாக உணர்த்திவிட்டது

மீண்டும் பேச்சுக்கள் நடத்தத் தயார் என்கிறது இலங்கை அரசு.

போராளிகளுடன் பேசத் தயார் என்கிறார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி.

பிரச்சினைக்கு உண்மையாகத் தீர்வு காண வேண்டும் என்று இலங்கை நினைத்துச் செயற்பட்டு இருந்தால் எப்போதோ தீர்வு கண்டு இருக்கலாம்.

**திம்பு முறிந்தது**

அனுராதபுரம் படுகொலை திம்புவுக்கு வழிகாட்டியது திம்புவில் போய் எப்படிப் பேசினார்கள்?

அனுராதபுரத்தில் ஓடிய இரத்தத்தை நிரந்தரமாகத் துடைத்து விடுமாற் போன்று பேசினார்களா?

வாலை விட்டு தும்பைப் பிடிக்குமாப் போல் சட்ட நுணுக்கத்தைத் தான் இலங்கை அரசுக் குழு பேசியது.

அதன் காரணமாக திம்பு முறிந்தது.

ஓராண்டின் பின்னர் மீண்டும் இப்போது அனுராதபுரத்தில் மட்டும் அல்ல, மற்றும் பல பகுதிகளில் இரத்த ஆறு ஓடிக்கொண்டு இருக்கிறது.

தமிழர் தனித் தேசிய இனம், தமிழருக்கு என்று ஒரு பரம்பரைத் தாயகம் இருக்கிறது, அவர்கள் சொந்தப் பூமியில் சுய கௌரவத்துடன் பாதுகாப்பாக வாழ வேண்டும். அதற்கான தீர்வு ஒன்றைக்காண வேண்டும்.

இப்படி இலங்கை அரசுத் தலைவர்கள், சிங்களத் தலைவர்கள் உள்ளத்தால் ஏற்று, செயலால் காட்ட முன்வருகிறார்களோ, அன்று தான் எந்தப் பேச்சும் பலனளிக்கும்; வெற்றி அளிக்கும்.

இதைத்தான் புகழ் பெற்ற உலகப்பத்திரிகைகள், அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

தனக்குப் பின்னால் ஜனநாயக நாடு ஒன்றை விட்டுச் செல்ல விரும்புவதாகக் கூறும் ஜனாதிபதி,

கௌரவமாகவும் பத்திரமாகவும் பாதுகாப்புடனும் தனது பாரம்பரிய பூமியில் வாழ தமிழினத்துக்கும் வழி காட்டி விட்டுச்செல்ல மாட்டாரா?

# உலககிண்ண உதைபந்தாட்டம்

## மெக்ஸிக்கோ நகர் விழாக்கோலம்

**-சண். ஜோண்சன்-**

மெக்ஸிக்கோ நகர் தன்னை மறந்த நிலையில் இப்பொழுது நடைபெற்றுவரும் 13 ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை கொண்டாடுகிறது.

இந்தப் போட்டியிலே பங்குபற்றும் 24 நாடுகளின் தேசியக் கொடிகள் ஆங்காங்கு பறக்க, வண்ண விளக்குகளின் ஒளிச் சிதறல்கள் மெக்ஸிக்கோ நகரை மேலும் மெருகூட்டுகின்றன.

பங்குபற்றும் 24 நாடுகளையும் 6 பிரிவுகளாகப் பிரித்து இந்த உலகக்கிண்ணப் போட்டிகள் கடந்த மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமாகின.

'ஏ' பிரிவு:- இத்தாலி, பல்கேரியா, ஆர்ஜென்ரீனா, தென்கொரியா ஆகிய நாட்டு அணிகள்.

'பி' பிரிவு:- மெக்ஸிக்கோ, பெல்ஜியம், பராகுவே, ஈராக் ஆகிய நாட்டு அணிகள்.

'சி' பிரிவு:- பிரான்ஸ், கனடா, ரஷ்யா, ஹங்கேரி ஆகிய நாட்டு அணிகள்.

'டி' பிரிவு:- பிரேஸில், ஸ்பெயின், அல்ஜீரியா, வட அயர்லாந்து ஆகிய நாட்டு அணிகள்.

'ஈ' பிரிவு:- மேற்கு ஜெர்மன், உருகுவே, ஸ்கொட்லாந்து, டென்மார்க் ஆகிய நாட்டு அணிகள்.

'எவ்' பிரிவு:- போலந்து, மொரோக்கோ, போர்த்துக்கல், இங்கிலாந்து ஆகிய நாட்டு அணிகள்

இத்தாலி அணிக்கும் பல்கேரிய அணிக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது போட்டி 1-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்த முதல்நாள் போட்டியை 1 லட்சத்து 20 ஆயிரம் உதைபந்தாட்ட ரசிகர்கள் நேரடியாகக் கண்டு களித்தனர்.

இந்தப் போட்டியைத் தொடர்ந்து 6 பிரிவுகளுக்கிடையிலான போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை 15 ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன.

இவற்றுள் ஆகக் கூடுதலாக 6 கோல்களைப் போட்ட பெருமையை ரஷ்ய அணி பெற்றுள்ளது.

இந்த அணி கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் ஹங்கேரி அணியை 6-0 என்ற கோல் அடிப்படையில் வென்றது.

### விளையாட்டு விமர்சனம்

24 நாட்டு அணிகளுள் எந்த அணி இம்முறை உலக வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரிக்கப் போகிறது என்பது கேள்விக்குறிதான்.

ஆனாலும், தற்போதைய ஐரோப்பிய உதைபந்தாட்ட சாம்பியனான பிரான்ஸ், தற்போதைய உலகச் சாம்பியனான இத்தாலி, மூன்று தடவைகள் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய பிரேஸில், ஆகிய நாட்டு அணிகளுக்கு இடையில் பலத்த போட்டி நிகழும் என உலக உதைபந்தாட்ட ரசிகர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

முதலாவது உலக கிண்ணத்திற்கான போட்டி 1930 ஆம் ஆண்டு நடைபெற்றது.

லத்தீன் அமெரிக்க நாடான உருகுவேயில் நடைபெற்ற இப்போட்டியில் ஆர்ஜென்ரீனா நாட்டு அணியைத் தோற்கடித்து உருகுவே அணி சாம்பியனானது.

1934, 1938 ஆம் ஆண்டுகளில் இத்தாலி அணி சாம்பியனானது.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு அதன்படி நடைபெற்று வந்த இந்தப் போட்டிகள் 1938 ஆம் ஆண்டின் பின்னர் உலகப் போர் காரணமாகத் தடைப்பட்டது.

அதன் பின்னர் மீண்டும் 1950 இல் நான்காவது உலக கிண்ணப் போட்டி பிரேஸிலில் நடந்தது அதில் உருகுவே அணி வெற்றியீட்டியது.

1954 இல் மேற்கு ஜெர்மனியும், 1958, 1962 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஆறுவது, ஏழாவது போட்டிகளில் பிரேஸில் அணியும் —

1966 இல் இங்கிலாந்தும், 1970 இல் மீண்டும் மூன்றுவது தடவையாக பிரேஸிலும் சாம்பியனாகின.

1974 இல் நடைபெற்ற பத்தாவது போட்டியில் மேற்கு ஜெர்மனி வென்றது.

1978 இல் தன்னுடைய நாட்டில் நடைபெற்ற போட்டியில் ஆர்ஜென்ரீனா சாம்பியன் பட்டத்தைச் சுவீகரித்தது.

1982 ஆம் ஆண்டு கடைசியாக நடைபெற்ற போட்டியில் இத்தாலி சாம்பியனாகி உலக கிண்ணத்தை மூன்றுவது தடவையாக தன்வசப்படுத்தியது.

கடந்த உலகக் கிண்ண போட்டியில் கிடைத்த வருமானத்திலும் கூடுதலாக இம்முறை கிடைக்கும் என சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் எதிர்பார்க்கிறது.

கிடைக்கும் தொகையில் 66 வீத பணத்தை போட்டியில் பங்குபற்றும் 24 நாடுகளுக்கு பகிர்ந்தளிப்பதென்றும் —

இறுதியாட்டத்திற்குத் தெரிவு செய்யப்படும் இரு அணிகளுக்கும் தலா 15 லட்சம் டாலர் வழங்குவதென்றும் சம்மேளனம் தீர்மானித்திருக்கிறது.

இந்த உலகக் கிண்ண போட்டியை ஒட்டி மெக்ஸிக்கோ நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தப் போட்டியை பல லட்சக்கணக்கான மக்கள் நேரிலும் தொலைக்காட்சி மூலமும் கண்டு களித்து வருகின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, 16 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 7-06-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 16 Second Lane, Power Station Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org